1778

1778

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.

V7. No.47 29.11.1934.

JL
M211, N28K N
N34.7.47
199147

1778

KALANILAYAM தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஆ நவம்பர் மீ 29 உ [No. 47

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 737
2. இரத்நாவளி (அங்கம் 3. களம் 1 - 5.)
வடமொழி நாடக மொழிபெயர்ப்பு 739
3. கம்பராமாயணம் (அரசியற் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 741
4. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 1-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 744
5. தமிழ்ப்பாடம் — (இலக்கணம்) 746
6. தருமன் மாண்பு.
K. T. விஜயராகவாசாரியார் B.A. 748
7. அண்டங்கள்.
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. 751
8. வர்த்தமானம் 752

## கலாநிலயம்

### இருவருக் கில்லை யிடம் 1.

**த**லைமகன் ஒருவன் தனது காதலியின் மனைப்புறங் குறுகிக் கதவைத்தட்டினான்; "யார் அது?" என்றோர் மெல்லிய குரல் உண்ணின்று கேட்டது. "நான் தான்" என்று பதிற்கூறினான் இக்காதலன். "உனக்கும் எனக்கும் இம்மனையின்கண் இடமில்லை" என்று அந்தக் குரல் எதிர்விளம்பியதே யல்லாமல் கபாடம் திறக்கப்படவில்லை. அதன்பின் அத்தலைமகன் வாடிய மனத்தனாய்ச் சென்று கானகமேகி ஒருவருடகாலங் கடுந்தவங்கிடந்து மீண்டும்வந்து தன் மனத்திற் கினியாள் வைகிய மனையின் கதவினைத் தட்டினான். "யார் அது?" என்னப் பண்டேபோல் கேட்டது அக்குரல். இம்முறை இவன், "நீதான்" என்று எதிர் இயம்பினான். அதன்மேல், கதவுதிறக்க, உட்சென்றனன் — இது பாரஸீகப்புலவர் ஜலாடீன் என்பவர் எழுதிய உருவகக் கதைகளில் ஒன்று.

இச் சிறுகதையினுள் அடங்கியிருக்கும் மெய்யன்பின் அருமை உன்னியுன்னி யுணர்தற் கேற்றதாம். இவ்வுலகம் மிகப்பெரியது, உண்மையே; ஆயினும், இருவருக்கு இங்கு இடமில்லை; இதுதான் இங்குளோர் இயம்பத்தெரியாமல் வருந்துகிற இவ்வருத்தங்கள் அனைத்திற்கும் அடிப்படையான இரகசியம். "நான் தான்" என்று ஒருவன் கூறிக்கொண்டு தட்டுகின்ற கதவெல்லாம் அடைத்துத்தான் இருக்கும். அவனது செய்கைகள் அன்பின் ஆர்வத்தால் அழைக்கப்பெற்றனபோல்தோன்றினும், சந்நிதிமுன் செல்லற்குரியானல்லன் அவன்; அன்னோர் கடைவாயிலில் எக்காலமுங் காத்துக்கிடக்க வேண்டியவர்களே. நான்தான் என்று சொல்லிவருகின்ற ஓர் அன்பு செல்லாக்காசு போல் திருப்பப்படும். இக்காலம், "முன்னேற்றம்" என்னும் சொல்லிற்கு அடுத்தபடியாக அதிகம்வழங்கப்படுவது "அன்பு" என்னுமிந்தச் சொல்லே. "முன்னேற்றம்" என்னும் அச்சொல் முழங்கி முழங்கி மூளியாய்ப்போன செய்தி ஒருசிலர்க்கேனும்தெரிந்துவிட்டது. மற்று, அன்பென்னும் இச்சொல் கூவியழைப்பதொன்றும் கூடிவாராமையைக் கண்டுகொள்ளற்கு இன்னும் காலம்சிறிது கழிதல் வேண்டும்போலும். "முன்னேற்றம்" என்னுஞ்சொல்லால் உலகம் அலைப்புண்பதைப் போன்றே, அன்புஎன்னும் ஆரவாரம்உலகத்தை அலைக்கின்றதெனக்கருதுதல் பிழையேயாயினும், அவ்வலைப்பினை இவ்வாரவாரம் தடுக்கவுந் தீர்க்கவும் இல்லை என்பதுநிச்சயம். ஏனெனில், சொல்லியோ சொல்லாமலேயோ அம்முன்னேற்றத்திற்கு உதவியாகவே அழைக்கப்படுகின்ற இவ்வன்பு அவ்வலைப்பினைச்சார்ந்துஆடுவதன்றி எதிர்த்தடக்குவது எங்ஙனம் இயலும்? இதனை எண்ணித்தானோ, "மறத்திற்கும் அஃதே துணை" எனப்பேசினார் திருவள்ளுவர்! "அன்பு உடைமை"யின் தன்மையை மறந்துஅதனை "அன்பு செய்கை" என்னுங்கருத்தினோடு மயங்குகின்றதால்விளைகின்ற விபரீதமாம்இது. அன்புடைமையை ஒரு மனநிலையாகக் கருதுங்கால் அவ்வன்பு அறத்திற்கே சார்பாவதும், அதனை மறந்து, அன்பு செய்கையை வற்புறுத்துங்கால் மறத்திற்கு மஃதே துணையாவதும் ஒருசிலர்க்கேனும் புலப்படும்.

ஏழைகளுக்குவேண்டுவனகொடுப்பார் அன்புடையோர்; இது அன்புடையோர் குணம். இதற்கெதிர், "ஏழைகளின்பால் அன்புசெய்கின்றேன் நான்" என்

றொருவன் அன்னமிட வருவானாயின் உண்மையில் அது அன்பில்லான் இட்ட அமுதேயன்றி வேறன்று. "நான் வந்து, உன்வயின் வைத்த அன்பினால் இது செய்கின்றேன்" என்ற எண்ணத்தினால் கொடுக்கும் வரையில் அது கடமையாக இறுக்கப்படுமேயன்றி ஒருகொடையாகஏற்றுக்கொள்ளப்படாது. அப்பாரஸீகக் காதலியின் வாயிலேபோல், ஏழையர்தம் இதயத்தின் கதவும் அன்பு செய்ய வருகின்ற இப்பரோபகாரிகளுக்கு அடைத்தேஇருக்கும். ஆகையாற்றான், இன்று அன்பு என்னும் பெயரால் 'பிரசாரம்' செய்யப்படுகின்ற பரோபகாரங்கள் அனைத்தும் ஒருவரையும் ஒற்றுமைப்படுத்தாமல் பிரிவையே பெரியதாக்குகின்றன. அன்பு செய்வோன் செய்யப்படுவோன் என வேறுபட இருவர் நிற்பின், இவ்விருவருக்கும் இல்லையிடம். இந்தஇருமைநீங்கி,அன்புடைமைஎன்னும் அந்நன்னிலையின் பாக்கியத்தைப் பெறுவதற்கு நெடுந்தவங் கிடப்பதன்றி வேறு வழியில்லை. "நான் பிறருக்கு ஒன்று செய்கின்றேன்"என்னும் எண்ணம் அன்புடைமை ஆகாது. நல்லதும் பொல்லாததுமான பெயர்கள்அதற்குரியன பிறபிற. தன்னையே பிறராகக் காண்பதுதான் அன்பு. யார் அது"? என்று கேட்கின்ற குரலுக்கு "நீதான்"என்றபதில் நாவின் முதலில் நடமாடும்பொழுதே அன்பு உடைமை அறியப்படும். உலகத்தின்கதவு அதன்பின்னர்த்தான் அவனுக்குத் திறக்கின்றது. இருவரும் ஒருவராய் இவ்வுலகமாம் காதல்மனையில் அனைவரும் இடம்பெறுகின்றனர்.

மற்று,தான்ஆகி வறிதுசென்றஅக்காதலன்,மீண்டு வந்து,'நீதான்' எனஉரைக்கநேர்ந்தது எங்ஙனம்? தவமிருந்த செம்மையால் இவன், தன்னை மறந்தனனோ, அல்லது அறிந்தனனோ, அல்லது துறந்தனனோ?—அசடர்தம்மை மறப்பார்,வித்தகர் தம்மைஅறிவார், அன்புடைய உத்தமர் தம்மைத் துறப்பார்.

தன்னை மறந்து மயங்கும் ஒருவனது திறத்தினைத் தெளிந்துகொள்வது எளியது. வேறோர் பாரஸீகக் கதை இதனை விளக்கும்.

நாட்டுப் புறத்தான் ஒருவனுக்கு எதிர்பாராமல் பெருஞ்செல்வம் எய்திவிட்டது. அதன்மேல் அவன் தன் கிராமத்தை விட்டு ஒரு நகரத்தைச் சென்றடைந்தான். அலைகின்ற மக்களின் ஆரவாரம் நிறைந்திருந்தது அந்நகரம். எப்பக்கம் திரும்பினுங் குழப்பம். வர்த்தகப் பொருள்களை வண்டிகளில் ஏற்றுவோர் சிலர், இறக்குவோர் சிலர். எங்கும் அமைதி காண்கிலன். இதற்கிடையில், வழிநடந்த இளைப்பினால் அவனுக்கு நித்திரை மூண்டது. இவ் வாரவாரங்களுக்கிடையே ஒருபுறம் படுக்க நினைத்தான். படுக்கும்பொழுது அவனுக்கு ஒரு எண்ணந்தோன்றியது. "ஆம், இவ்வளவு ஆரவாரங்களுக்கிடையே தூங்கினேனானால், தூங்கி எழுந்தபின் என்னை நான்தான் என்று எப்படித் தெரிந்துகொள்ளுவேன்" என்று இப்படி எண்ணமிட்டு இறுதியில், தான் தான்தான் என்பதற்கடையாளமாகத் தன்காலில் ஒரு சுரைக்காயைக் கட்டிக்கொண்டுஉறங்கினான். இதனைப்பார்த்துக்கொண்டிருந்த ஒரு குறும்பன், இவனுடைய நோக்கத்தை ஊகித்து, இவன்காலிலிருந்த சுரைக்காயை அவிழ்த்துத் தன்காலில் கட்டிக்கொண்டவனுக்கு அயலில் உறங்குவான்போலக் கிடந்தான். சிறிது நேரங்கழித்துக் கண்விழித்த அந்நாட்டுப்புறத்தான், தான் காலில் கட்டிக்கொண்ட அடையாளத்தைத்தேடுதலும் அது அங்கு இல்லாமையால்திகைப்புற்றுக்கண்கள்புரளக் கலங்குங்கால், அயலான்காலில்இருந்தஅச்சுரைக்காயிவனுக்குத் தென்பட்டது. அதனைக்கண்டு, "ஏ ஏ! ஒன்றிற்கும் உதவாத கயவனே, என்னை நீ இப்படிக் கலங்கச்செய்யலாமா! உன்னாலேயல்லவோ நான்இப்பொழுது திகைக்கின்றேன். நான் நானாயின் இச்சுரைக்காய் ஏன் உன்காலில் இருக்கின்றது? நான் நீயாயின், மற்று, நான் யார், இப்பொழுது எங்கு இருக்கின்றேன்" என்னக் கதறினான்.

இது அசடர் செய்தி. இதற்கிணையாக, இந்நுண்மையை மதுமயக்கத்தின் மீதேற்றி மாதர் பேதமை கெழுமப் பரஞ்சோதி முனிவர் காட்டிய ஒரு சிறு நாடகத்தையும் இங்குக் கருத்துட் கொள்ளலாம். கள்ளின்வேகத்தால் கலங்கிய கருத்தினள் ஒருத்தி,

சாடியுள் நறவ முண்டாள்
தன்னுரு வேறு பாட்டை
ஆடியுள் நோக்கி நானோ
அல்லனோ வெனைத்தான் கைகொண்
டோடினர் பிறரு முண்டோ
உயிரன்னார் வந்திங் கென்னைத்
தேடினென் செய்கே னென்னைத்
தேடித்தா சேடி யென்றாள்

[சாடியினுள் இருந்த கள்ளையெல்லாம் குடித்தவளாகி, தன் உருவம் வேறுபட்டிருப்பதைக் கண்ணாடியிற் பார்த்து, "இது நானோ, அல்லனோ! என்னை யாரேனும் பிடித்துக்கொண்டு ஓடிவிட்டனரோ! எனது நாயகன் இங்கு வந்து என்னைத்தேடினால் நான்என்னசெய்வேன்! ஆகையால் தோழியே, நீ என்னை விரைவில் தேடிக்கொடு" என்றாள்.]

காலிற் கட்டிய சுரக்காய் இல்லாமையாலும், ஆடியிற்றோன்றிய தன் உருவத்தின் வேறுபாட்டினாலும் தன்னை அறிந்துகொள்ளமாட்டாமல் திகைக்கின்ற இவ்வசட்டுத்தனம் மனிதர்படுகின்ற அல்லல் பலவற்றிற்கு ஆதாரமாகின்றது.

இனி, தம்மை அறிந்தவர் அறிஞர் எனப்படுகின்றனர். இவ்வறிவு மெய்யுணர்வு எனவும் கூறப்படுவதுண்டு. அசடர்தம் மயக்கத்தின் தன்மையை ஆராய்ந்து தெரிந்துகொள்ளும்பொழுது இவ்வறிவின் இரகசியமும் தெளிந்துவிடும்.

வித்தகம் முதிர்ந்த வேந்தனும் அச் சனகன்பால் சென்று, "நீ யார்?" என்று நாம் கேட்போமாயின், பெரும்பாலும் அவன் விடை, "நான் ஒரு அரசன்" என்னும் வாய்பாட்டுவாசகத்தில் அடங்கியிருக்கும். இதே கேள்விக்கு இராவணனோ, "அரசன் நான்!" என்னவே பெரும்பாலும் விடைகூறுவான். "நான் அரசன்" என்பதற்கும் "அரசன் நான்" என்பதற்கும் வேற்றுமைதான் என்னவோவென்று சிலர்ஐயுறலாம். வாசகத்தினளவு வேற்றுமை இல்லைபோலத் தோன்றுவது உண்மையேயாயினும், இன்னவாறு சொற்களை மாற்றிச்சொல்லவைக்கின்ற அவ்விருவர் தம் மனத்தின்செய்தியைஒருவாறுவேற்றுமைப்பட ஊகிக்கலாம்.

"நான் அரசன்," அல்லது, "நான் வறியன்" என்பனபோல் தன்னை முதலில்வைத்துப் பிறகு தனது நிலையைப்பேசுமிது அந்நினைவையே தொடர்ந்து நிகழ்கின்றது என்னக் கொள்வது பெரும்பாலும் பிழையாகாது. முதலில், 'தான்' ஒருவன் உளன் என்றும், பிறகு தான் இப்பொ[illegible] இன்ன

m211,N2‡KN
N34.2.47
199191



தென்றும் நினைக்கின்ற நீர்மையினால் நிகழவேண்டுவன இவ்வாசகங்கள். இதன்படி, அரசன் ஆயினும் வறியனாயினும் மற்றுயாவதேயினும் தன் நிலை, அந்நிலையினின்று வேறாய 'தான்' என்னும் ஒருவன் அவைகளுக்கு அயலாகி நிற்கிறான் என்ன எண்ணவல்லவனாவது மிகப்பெரிய நன்மைகளுக்கு ஆதாரம் ஆதல் கூடும். "நான் இப்பொழுது அரசனாகி இருக்கின்றேன்," அல்லது, "நான் இப்பொழுது வறியனாகிஇருக்கின்றேன்" என்னத் தன்னைத் தன் நிலைமையிலிருந்து பிரித்துக்கொள்வதே கோடிபெறும். இதனால், அந்நிலைமைகள் மாறினாலும் அல்லது இல்லாமற்போனாலும், தான் மாத்திரம் என்றும் இருக்கின்றவோர் உணர்வு உள்ளூற உறைந்திருக்கின்ற தென்பதைத் தெரிந்துகொள்ள இயலுமே.

இதற்கெதிர், "அரசன் நான்" அல்லது "வறியன் நான்" என்பன போன்ற வாசகங்கள், இருக்கின்ற நிலைமைபற்றியே 'தான்' என்பதும் ஒன்று இருப்பதுபோல் பாவிக்கின்றன. அந்நிலைமை மாறினும் அழியினும் அப்புறமும் ஒன்று எஞ்சி நிற்கின்றதென்னும் எண்ணம் அதற்கில்லை. எனின், தன்னிலையினின்று தன்னை வேறாக அறியாத புன்மையுடைய புத்தியின் அவலமாம் இது. சுரைக்காய்க்காலனது சூழ்ச்சியின்படி இதனைச்சோதிக்குங்கால், தன்னைத் தன் கால்கட்டாகிய சுரைக்காயாகவே மதித்துவிடும் ஓர் இழுதை ஆவதற்கு இதுவே வழி. அறிவுடையோர், தம்மைச் சார்ந்திருக்கின்ற நிலைமைகளினின்று தாம் என்னும் அத்தத்துவம் வேறாயதொன் றென்னப் பிரித்துணர்வார். இவ்வுணர்வின் தன்மை நன்மை முதலியவைகளை முன்னர், "நான் நானே" என்னுந் தலையங்கத்தில் விளக்கியுளோமாதலின் இச் செவ்வியில் அவ்விடயங்களையும் நினைவு செய்துகொள்ளல் நலம் (6-வது வால்யூம், 461-வது பக்கம்)

ஆயினும், அறிஞர் தம்மை அறிந்துகொள்ளும் அவ்வறிவின் எல்லையை நாம் இங்குக் குறித்துக்காட்டவில்லை. 'தன்னறிவு' என்னு மது நம் தத்துவநூல்களில் அகன்ற பொருளில் ஆராயப்படும். "நான்" என்னும் அது, எது வென்றும், அதன் இலக்கணம் யாதென்றும் தெளிவுறக் கருதி ஒரு முடிவிற்கு வருதல் வேண்டுமென்பது அதன்நோக்கம். இங்கு, "நான் அரசன்" என்னும் வாசகத்தினுள் அடங்கிய அறிவு அத்தூரம் செல்வதாக எண்ணலாகாது. தன்னுடைய தற்கால நிலைமையே தான் அன்று என்பதை எதிர்மறைமுறையில் ஏற்றுக்கொள்வதையே இது குறிக்கின்றது. தான் என்னும் அது, தன் காலில் கட்டிய சுரக்காய் அன்று என்னுமளவு தெரிந்துகொள்வதை மட்டுமே இங்கு நினைத்துப் பேசுகின்றோம்.

---

# இரத்நாவளி

[734-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 3. களம் 1.

இடம்:—அரண்மனையில் ஓர் அறை.
அரசியின் பணிப்பெண்களில் ஒருத்தியாகிய
மதனிகை வருகின்றாள்.

மதனிகை:—காஞ்சனமாலை, வந்தாள், சென்றாள்; எங்குற்றாளோ! இதோ வருகின்றாள்.

[காஞ்சனமாலை வருகின்றாள்]

காஞ்ச:—வஸந்தகா, நீ வல்லன். நம்மந்திரத்தலைவனினும் தந்திரத்தில் வல்லன் நீ!

மதனி:—என்னவிது, தோழி காஞ்சனமாலை, நின் புகழிற்கு உரியவனாக வஸந்தகன் யாது சாதித்துவிட்டான்?

காஞ்ச:—நீயேன் கேட்கின்றாய்? இரகசியத்தைக் காப்பாற்றி வைத்துக்கொள்ள உன்னால் இயலாது.

மதனி:—நம்அரசியின் அடிகளின்மீதுஆணை, ஒருவருக்குஞ் சொல்லமாட்டேன்.

காஞ்ச:—ஆயின், சொல்கின்றேன் கேள். அரண்மனைவழியாகநான்வந்தபோது, சித்திரச்சாலைக்கருகு, வஸந்தகனும்ஸுஸங்கதையும்தம்முள்பேசிக்கொண்டிருக்கக் கேட்டேன்.

மதனி:—எதனைப்பற்றி?

காஞ்ச:—நமது அரசன் கொண்டுள்ளநோய்க்கெல்லாம் ஸாகரிகையே காரணம்என்று கூறி, அதற்கோர் பரிகாரம்கூறும்படியும்ஸுஸங்கதையைக்கேட்டான் வஸந்தகன்.

மதனி:—அதற்கவள் என்ன சொன்னாள்?

காஞ்ச:—"அப்படத்தைக் கண்டதிலிருந்து யாது நடைபெறுகின்ற தென்பதைத் தெரிந்துகொண்ட நம் அரசி, என்மீது யாதும் சந்தேகங்கொள்ளாமல், ஸாகரிகையை என் காவலில் வைத்து, தன் ஆடை அணிகலன்களிற் சிலவற்றையும் எனக்கு வெகுமதியாகக் கொடுத்து, அவளைச் சாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லியிருக்கின்றாள். இவைகளைக்கொண்டு ஸாகரிகையை அரசியைப்போலவும் என்னைக் காஞ்சனமாலை போலவும் வேடம் மாற்றி, மாலைப்பொழுதில் மாதவிப்பந்தரில் மன்னவனைச் சந்திப்போம்: நீயே வந்து எங்களை அங்கு அழைத்துச் செல்வாயோ" என்று கூறினாள்.

மதனி:—நன்கு சூழ்ந்தனை ஸுஸங்கதா. தன்னைச் சேர்ந்தவர்பால் மிக்க அன்புவைத்துள்ள நம் தலைவியை இப்படி நீ எளிதில் வஞ்சித்துவிட இயலுமென்றெண்ணினாயோ?

காஞ்ச:—எங்குச் செல்கின்றாய் நீ?

மதனி:—உன்னைத் தேடித்தான் வந்தேன். அரசனது நோயைப்பற்றிய வதந்தியைக் கேட்டுவர நீ இவ்வளவுகாலந் தாழ்ந்ததால் கவலைகொண்ட நம் அரசி நீ யாது ஆயினாய் என்று பார்த்துவரும்படி என்னை அனுப்பினாள்.

காஞ்ச:—நம்மரசி பெரும் பேதை; இப்படி மோசம் போகின்றாள். அரசனுக்கிருக்கின்ற நோயெல்லாம் ஆசையே. தந்த மண்டபத்தில் இப்பொழுது இருக்கின்றான். வா, நாம்போய் அரசிக்கு இதனைச்சொல்வோம்.

(போகின்றனர்)

களம் 2.

இடம்:—தந்தமண்டபம்.
வத்ஸராஜன் அங்குமிங்கும் உலவிக்
கொண் டிருக்கின்றான்.

வத்ஸ:—இதயமே சற்றே பொறு. காதல் மூட்டிய இத்தீயை என் நெட்டுயிர்ப்பிற்கெல்லாம் காரணமா

யிருக்கும் அக்கன்னியே தணித்தல் கூடும். நான் சற்றுமுன் பற்றியிருந்த அந்தக் கரங்களா லல்லாமல், குளிர்ந்த சந்தனத்தால் என் ஆர்வத்தின் வெம்மையை நான் அணைக்க முயல்வதற்கு நீ யென்னைப் பழிப்பானேன். அலைந்து திரிவதே இயற்கையாகவுடைய மனத்தினை இலக்குவைத்து அம்பெய்தலோ மிக வருமை; ஆயின் உருவில்லா அவ்வொரு வில்லாளி எவ்வாறுதான் தன்னுடைய பாணங்களையெல்லாம் என் மனத்தினுள் அழுத்தினானோ அறிகிலேன்! கன்னற்சிலைக் கடவுளே, நின் ஐங்கணைகளால் அடித்தற்குரியவர் கணக்கிறந்தோராக, நானொருவனே இன்றுனக்கேற்ற குறி ஆகியது ஏனோ! எத்தனையோ பலரை நீ ஒரே பாணத்தால் எய்யக்கூடியவனா யிருக்க, முறை பிறழ்ந்து, அத்துணைப் பாணங்களையும் என்னொருவன்மீதே மாளுமளவும் எய்து வீழ்த்துவது உனக்கழகாமோ! எனினும் நான், என்பொருட்டினும் ஸாகரிகையின்பொருட்டே அதிகம் வருந்துகின்றேன். தன் இரகசியம் வெளிப்பட்டுவிட்டதென் றஞ்சியேயவள் என் பார்வையை எதிர்நோக்கக் கூசுகின்றாள். அவள் தோழிமார்களில் இருவர் தம்முள் உரையாடினால், தன்னைப்பற்றியே பேசுகின்றார்கள் என்று எண்ணுகின்றாள்; அவர்கள் சிரித்தால் தன்னைநோக்கியே சிரிக்கின்றனர் என மதிக்கின்றாள். ஆகா! என் காதற்கினிய கட்டழகியே, நீ கலக்கங்கொள்வதைக் காண என்மனம்இரங்குகின்றது. என்தேவி வாஸவதத்தை மறைக்காமாட்டாக் கோபமுடன் தன் பார்வையை உன்மீது செலுத்தும்போது அது கண்டு நீ கொள்கின்றஅச்சத்தில் நானும் ஒருகூறு கொள்ளுகின்றேன்—என்னே இப்படிக் காலந்தாழ்க்கின்றான் வஸந்தகன்! அவ்வனிதையைப்பற்றிய வதந்தி தெரிந்துகொண்டுவரும்படி அனுப்பியிருக்கின்றேனவனை.

[வஸந்தகன் வருகின்றான்]

வஸந்:—(தனக்குள்) ஹா, ஹா! நான் கொணரும் இவ்வினிய வதந்தியைக் கேட்கும் நீ, கௌசாம்பிக்கு அரசனாகி அரியணை யேறிய நாளிலும் இன்று அதிகமும் மகிழ்வாய். அதோ இருக்கின்றான்— என்னையெதிர்பார்த்துளன். மங்களம், நண்பா, மங்களம்! அதிர்ஷ்டம் நல்லதாக இருக்கின்றது. உன் ஆசை நிறைவேறும்.

வத்ஸ:—ஸாகரிகை எவ்வாறு இருக்கின்றாள்?

வஸந்:—இன்னும் சிறிதுபோதினில் நீயே நேரில் தெரிந்துகொள்வாய்.

வத்ஸ:—ஆயின், அவளை நான் இப்பொழுதே காணலாகுமோ?

வஸந்:—ஏன் ஆகாது! பிரகஸ்பதியின் புத்தியை இகழ்ந்து பரிகசிக்கும் நானே உன் மந்திரியா யிருக்கும்போது......

வத்ஸ:—வாஸ்தவம்; உன்னா லாகாதது ஒன்றுமில்லை. இனி, நடந்ததைச் சொல்.

வஸந்:—(அரசன்காதோடு பேசுகின்றான்) அவ்வளவுதான்; முழுதுஞ் சொல்லிவிட்டேன்.

வத்ஸ:—இதற்குத் தக்க வெகுமதி கொடுத்தல் வேண்டும் (தன்கைக் கடகத்தைக் கழற்றிக் கொடுக்கின்றான்)

வஸந்:—தங்கக் கடகம் என் கைக்கு மிக்க அழகாக இருக்கின்றது. இதனை என்மனைவிக்குக்காட்ட வேண்டும்.

(போக முயல்கின்றான்)

வத்ஸ:—இரு இரு நண்பா, இன்னொரு வேளை காட்டினா லாகாதா! பகற்பொழுதில் இன்னும் எத்துணை எஞ்சியிருக்கின்றது.

வஸந்:—ஆயிரங் கிரணமுடைய ஆதித்தன் மேலைமலைச் சோலையை நெருங்குகின்றான்.

வத்ஸ:—உண்மையே, ஓராழித் தேரோன் உலகயாத்திரை செய்து, நாளை வைகறைவரையில் இளைப்பாற வெண்ணினனாகி அப்பருவதத்தின் நெற்றியில் தங்கி, சிதறியகிரணங்களைத் தன்பால் அழைத்தலும், பொன்னின் வரியென அவன் இரதத்தினைச் சூழ்கின்றஅக்கிரணங்கள், ககனவட்டத்தினின்று நடுவினை நோக்கிப்பாய்வனபோல் தோன்றுகின்றன. குழுமிய இவ்வொளியின்கற்றையொடு குடபால்மலையில் குடிகொள்ளும் பகலோன் தன்காதலியாம் பதுமமலரை நோக்கி, "அன்புடையாய், என்வேளை வந்துவிட்டது, நான் பிரிதல்வேண்டும். காலையில்நா னுன்துயிலினைக் கலைக்கும்வரையில், நின் இமைகளில் உறக்கம் உறைவதாக" என்று விடைபெற்றுக்கொள்கின்றான். ஆதலின், மாதவிப்பந்தருக்குச் சென்றுநாம், என் அழகியின் வருகைக்குக் காத்திருப்போம்.

வஸந்:—வருகின்றேன். மரமிது இடைவெளியிது வெனத் தெரியாமல் இருள்சூழ்கின்றது. சேற்றிலே அளைந்த எருமையின் தோலென ஒரு கருமை இச்சோலையின்மீது படர்கின்றது. கீழ்த்திசையில் அடர்கின்ற இருட்டினால் ஆகாயம் மறைகின்றது.

வத்ஸ:—உண்மையே; கிழக்கில் திரண்டு மெல்ல மெல்ல முதிர்கின்றஇவ்விருட்டானது ஏனையதிசைகளையும் மறைத்துவிடும். சிவபிரானது கழுத்தின் நிறத்தினைக் கவர்ந்துகொண்டு படர்கின்ற இவ்விருளில், மரங்களும் மலைகளும் பட்டினங்களும் விசும்பும் நிலமும் எல்லாம் அமிழ்ந்துவிடுகின்றன. வா, நந்தவனத்திற்குச் செல்வோம்.

[போகின்றனர்]

### களம் 3.

இடம்:—நந்தவனம்.

வத்ஸராஜனும் வஸந்தகனும் வருகின்றனர்.

வஸந்:—இந்த மரக்கூட்டங்கள்தாம் மகரந்தச் சோலையோ? ஒன்றும் நிச்சியமாகத் தெரியவில்லையே. நாம் செல்லவேண்டிய வழி யெது?

வத்ஸ:—மேலேசெல்; இதுவே நேர்வழி. பாதையை நானறிவேன். சம்பக மரங்கள் இங்குள, அவைகளின் நன்மணம் கமழ்கின்றது. ஸிந்துர மரங்கள் இவை; வேங்கை மரங்களைக் கடக்கின்றோம் இப்பொழுது; பாடலித்தருக்கள் அங்கேயுள: அவைகளினின்றுதனித்தனி வீசும்வாசனை அவைகளைக் காட்டித்தருகின்றன இருள் இரட்டியதனா லவை ஒளிந்திருப்பினும் இம் மணத்தினைப் பற்றியே நாமேகும் வழியைத் தெரிந்துகொள்ளலாம்.

வஸந்:—ஆம், வந்துவிட்டோம், இதுதான் மாதவிப்பந்தர். வண்டுகளை வரவழைக்கும் முகையின் மணத்தாலும், பூக்கள்உதிர்ந்த தரையின் மென்மையாலும் உணர்கின்றேன். நான் சென்று ஸாகரிகையை அழைத்துவரும் வரையில் இவ்விடத்தே இரு. விரைவில் மீள்கின்றேன்.

வத்ஸ:—இமைப்பதன்முன் நீ இங்கு இருத்தல் வேண்டும்.

வஸந்:—போவதன்முன் மீண்டுவிடுவேன். அஞ்சாதே.

[போகின்றான்]



வத்ஸ:—இந்த மரகதப்பாறையின்மீது அமர்ந்து ஸாகரிகையின் வருகைக்குக் காத்திருப்பேன். தன் பழைய காதலைக் கைவிட்டுப் புதுக்காதல் புகுகின்ற விடலையின்சார்பு யார்தான் நிற்பார்? முதன்முறை தலைப்படுமிடம் நண்ணுகின்ற வோர் நாணுடை நங்கை, கடைக்கண் பார்வையொன்றே தன் காதலன் மீது போக்குவாள். தன்னைத்தழுவியகரங்களை அவள் தள்ளமாட்டாளாயினும் காதலனதுபார்வையினின்றும் விலகித் தன்முகத்தினைத் திருப்பிக்கொள்வாள். "விடு விடு, என்னை விடு, நான் செல்வேன்" என்றுஓயாமல் உரைத்திருப்பாளாயினும், அவளைத் தடுக்குமிவன் ஆர்வமுடைய கரங்களின் மென்மைக்கடங்கிவிடுவாள். காதல்கூர் கன்னியொருத்தியின் அழகை இக்களவொழுக்கம்எத்துணைஎத்துணை அதிகமாக்குகின்றது! வஸந்தகன் ஏனின்னும்வந்திலன்! இந்தக் களவுஞ் சூழ்ச்சியும் வாஸவதத்தைக்குத்தெரிந்துவிட்டனவோ! (பின் செல்கின்றான்)

### களம் 4.

இடம்:—அரண்மனையின் ஓர் அறை.

வாஸவதத்தையுங் காஞ்சனமாலையும் வருகின்றனர்.

வாஸவ:—என்னவிது! என்னைப்போல்ஆடையணிகலன்களணிந்து ஸாகரிகை என் தலைவனைச் சந்திக்க உரைத்தனள் என்பதும் உண்மையாகக் கூடுமோ?

காஞ்ச:—அன்னாய், அது உண்மையே. சித்திரச்சாலையின்வாயிலருகு வஸந்தகன் தென்படுவானானால் உன் சந்தேகம் தீர்ந்துவிடுமல்லவா?

வாஸவ:—வா, அங்குப் போய்ப் பார்ப்போம்.

(போகின்றனர்)

### களம் 5.

இடம்:—அரண்மனையின் சித்திரச்சாலைக்குச் செல்லும் வழி.

வஸந்தகன் வேடம்பூண்டு வருகிறான்.

வஸந்:—காலடிச்சத்தம் கேட்டது, ஸாகரிகைவருகின்றாள்.

(ஒருபுறம் ஒதுங்கி நிற்கின்றான்)

வாஸவதத்தையும் காஞ்சனமாலையும் வருகின்றனர்.

காஞ்ச:—இதுதான் இடம். வஸந்தகன் இங்கு இருக்கின்றானோ பார்ப்போம் (விரலை நொடிக்கின்றாள்).

வஸந்:—(முன்வந்து) ஹ! ஸுஸங்கதா, நன்று செய்தனை. நா னுன்னைக் காஞ்சனமாலை யென்றே எண்ணிவிட்டேன். ஸாகரிகை எங்குளள்?

காஞ்ச:—(வாஸவதத்தையைக் காட்டி) அதோ.

வஸந்:—அடே! அரசியேதான் அவள்.

வாஸவ:—(ஒரு புறமாய்) என்னை இவன் தெரிந்துகொண்டுவிட்டானோ!

வஸந்:—ஸாகரிகா, வா. இவ்வழி.

காஞ்ச:—(அரசியை நோக்கி) அஞ்சாதே. அவன் அறிந்திலன். (வஸந்தகனைக் குறித்து) ஏ ஏ! கள்வா, இந்தக் காரியஞ் செய்வதற்கு நீ என்னபாடு படப்போகின்றாய் பார்.

வஸந்:—விரைக, விரைக, ஸாகரிகா, கலைதவழுங் கடவுள் கீழ்த்திசை யுதிக்கின்றான். விரைக.

(செல்கின்றனர்)

---

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—8. அரசியற் படலம்

[726-வது பக்கத் தொடர்ச்சி]

கையாற் சூட்டக் காரண முளது

அன்பின் மிக்காள் ஒரு மனைவி அல்லலுற்று, தன் இன்னுயிரை அவலமாய்ப் போக்கிக்கொண்டவொரு நாயகனைத் தழுவி ஆற்றுந்துன்பமோ அளப்பரிய தூய்மை வாய்ந்தது. இவள்சொற் கேளாமையாலன்றோ அவன் அந்நிலையனாயினன் என்பதை உன்னுங்கால் பெருகுகின்ற பரிவின் வெள்ளம் உணர்வினை உடைத்துச் செல்லும். அன்னவள் துயரத்தை ஆற்றலரிது; மொழிகள் சில இழைத்து ஆற்றமுயல்வதற்கும் ஒருவரும் முற்படார். இராமன் இக்காட்சியைக் காணமல் முன்னரே ஏகிவிட்டான். அருகிருந்த அனுமன்தானும், வான்மீகத்திற்கூறியதுபோல், யாக்கைநிலையாமை அனைய பழையபழைய பொதுமைகளாலும், இனி வானரஇராச்சியம் அவனுடையதாய்விட்டதென்னும் ஆசை வார்த்தைகளாலும் யாதும் தேற்றறவு கூறநினையாமல், தாரையை மற்றமடவாருடன் அவள் மாளிகைக்கண் அனுப்பிவிட்டு வாலியின் இறுதிக் கடன்களை முடித்துவைத்தான். சீதையின் நிலைமையை நினைத்து வருந்தியஇராமனுக்கு அவ்விரவும் கழிந்தது.

புதல்வன் பொன்மகு டம்பொ றுத்தலான்
முதல்வன் பேருவ கைக்கு முந்துவான்
உதவும் பூமகள் சேர வொண்மலர்க்
கதவஞ் செய்ய கரத்தி னீக்கினன்

[தன் புதல்வனாகிய சுக்கிரீவன் அன்றைய தினம் பொன்கிரீடம் தரிக்கப் போவதால், அவன் தந்தையாகிய சூரியன் அதனைக் கண்டு மகிழ்வதற்கு விரைந்து வந்தவனாகி, அந்தப் பட்டாபிஷேகத்திற்கு உதவுகின்ற இலக்குமியானவள் அவனை வந்து அடையும்படி, பிரகாசம் பொருந்திய தாமரை மலர்களின் இதழ்களாகிய கதவுகளை, தன் சிவந்த கிரணங்களாகிய கைகளினால் திறந்துவிட்டான்.]

இந்தக் கதிரவன் முன்னே எதிர்பார்த்திருந்தபடி, தன்குல மைந்தன் இராமனது மகுடாபிடேகத்தை, கைகேசியின் சூழ்ச்சியால், காணமல் இழந்தவொரு பரிவுதீர இந்தச்சுக்கிரீவனது மகுடாபிடேகத்தையேனும் காணலாமெனுமாசையால் விரைவது இயற்கையேயாம். முன்னே, அரசத்திரு வந்து இராமனைச்சேரும்வண்ணம் தாமரைக்கோயிலை இவன் திறந்து வைப்பதன் முன்னரே, புரந்தரனார் பெருந்தவம் இருந்தமையால், சிற்றன்னையின் மனம் திரிந்து அவள் தயரதன் வாய்மையையும் வாங்கிவிட்டனள். ஆதலால் அன்றலர்ந்த செந்தாமரைகள் பாவைமார்முகமென்னவே மலரவேண்டியவைகளாய் முடிந்தன.

அதுகா லத்தி லருட்கு நாயகன்
மதிசா றம்பியை வல்லை யேவினன்

கதிரோன் மைந்தனை யைய கைகளால்
விதியான் மௌலி மிலைச்சு வாயென

[அப்போது கருணையிற் சிறந்த இராமன், அறிவுமிக்க தன் தம்பியாகிய இலக்குமணனைநோக்கி,"அப்பா, சூரிய குமாரனை சுக்கிரீவனை விதிமுறைப்படி உன் கைகளால் முடிசூட்டக்கடவாய்" என்று விரைவாக ஏவினான்]

மகுடம் ஒருவனுக்குச் சூட்டுவதென்னின் அன்னது புரிதற்குரிய அவயவம் கைகளன்றி வேறில்லை. எனினும், இராகவன் இக்குமணனை அழைத்து, "நீ சுக்கிரீவனுக்கு உன் கைகளால் முடிசூட்டி வை" என்றது முற்றிலும்மோனையின்பொருட்டேயன்று. வேறொரு காரணமும் இருத்தல் வேண்டும். சீதையைக் கண்டுமீண்ட அந்நாள் அனுமன்,"கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்" என்று இராமனுக்குரைக்கும்போது, காண்பதற்கு வேறோர்பொறியின்றியும் "கண்களால் கண்டேன்" என்றது, (இரண்டாஞ் சீரில் ஓர் மோனைவந் திருப்பதால்) மோனை பற்றி நேர்ந்ததோர் மிகையன்று. "மகிழ்வின்றித் துயரோடு வாடிக் கலங்கிவருந்திய நிலையைத் தெரிவித்த அவளுடைய கண்களால், அவள் கற்பினுக்கு அணியாய், இராவணன் சிறையிலும், நிற்கின்றாள் என்பதைக் கண்டேன்" என்னவே அனுமன் அறிவுறுத்தினான் போலும். அப்படி இங்குச் "சுக்கிரீவன் கைகளாலே அவனுக்கு முடிசூட்டு" என்று இலக்குவனை இராமன் ஏவினானென்னல் எவ்வகையிலும் பொருந்தாது. வான்மீகத்தில் வானரர்களே சுக்கிரீவனுக்கு முடிசூட்டி வைத்தனர். அதற்குமாறாக இங்கு இராமன் இலக்குவனைக்கொண்டு முடிசூட்டிவைத்தனுக் கோர்நாடகஅமைதிதோன்றுமாயின், அவனையவன் "கைகளால்" சூட்டும்படி ஏவியதற்கும் ஒருசிறிது காரணம் காணலாகலாம். தன் கருத்திற்கு ஈடுபடாமல்இறையேனும்ஒருவர்மாறுபடுவாராயின்,அவருக்கொரு பாடம் கற்பிக்காமல் இராகவன் ஒருபோதுந் தீர்வதில்லை. இளமைதொட்டு இவனுக்கிந்த இயல்பு உண்டு. பெண்ணென நினைத்துத் தாடகைமீது பகழியேவாமல், வேறு வேறு கோசிகன் கூறியவற்றை ஏற்பதின்றி இவன் நின்றபோது, அம்முனிவன், "ஈறினல்லறம் பார்த்திசைத்தேன், அரக்கியைக் கோறி" என்றுகட்டளையிடவும், இராமன், "அறன் அல்லவு மெய்தினால் அது செய்கவென்று ஏவினால், மெய்ய நின்னுரை வேதமெனக் கொண்டு செய்கையன்றோ அறஞ்செய்யுமாறு" என்று வில்லை வளைத்த வாங்கே வாயால் விளம்பிய அச்சொல், மாறுபட்டார்மாட்டுத் தன் நினைவைத் தெரிவித்து அவர் எதிர்பேசும் வகையின்றி மனத்துளே சிறிது கலக்கங்காணும்படி செய்தவொரு சூழ்ச்சியேயாம். தன்முன் தமியனாய் வந்து நின்ற தனையனை "விளைந்ததென் இடையூறுண்டோ நெடுமுடி புனைதற்கு" என்று கௌசலை கேட்டதற்கு "நின்காதல் திருமகன் பரதனே துங்கமா முடி சூடுகின்றான்" என்று இராகவன் எதிருரைத்ததும் அத்தகையதே. பின்னர், சரண்புக வந்த விபீடணனை ஏற்கலாகாதெனத் தடுத்துச் சுக்கிரீவன், "இவன் தம்முனைத் துறந்தது தரும நீதியோ" என்றும் "தன் தமையனுக்கு உறவாகாத இவன் வேறுயாருக் குறவாகுவான்" என்னவும் தனது சரிதத்தையெல்லாம் மறந்து செப்பியபோது, இராமன், "கதிரோன் மைந்த கோதிலாது அவனை நீயே என்வயிற் கொணர்தி" என்று அச்சுக்கிரீவனையே அனுப்பியதும் இராமனது இந்தக் குணத்தினால் நேர்ந்ததே *. இப்பொழுது இலக்குவன் இதனிற் றன்னுடைய கூறுகொள்கின்றான். வாலியும் சுக்கிரீவனும் தொடங்கிய போரினைக் காணற் காற்றாமல், இராமனது செய்கை தனக்குடன்பாடிலாமையைத் தெரிவித்த இவ்விலக்குமணனுக்கு அப்பொழுதே அதற்குரிய ஒரு கூலியை,பாதனைப் புகழுமாற்றால், கொடுத்தது போதாதென்று மீண்டும் இவ்வயின் இராமன், அந்த இலக்குவனைக் கொண்டே இந்தச் சுக்கிரீவனுக்கு முடிசூட்டி வைக்கச்செய்தவிது எஞ்சிய பழியையும் விளையாட்டாய்த் தீர்த்துக்கொள்கின்ற வகையேயன்றி வேறு அன்று. "அப்பா, உன்னுடைய கைகளாலேயே முடிசூட்டி, வா பார்ப்போம்" என்னுங்கால், இராகவன் உற்றிருக்கின்ற வருத்தத்திற்கு இடையேயும் அவன் உதடுகளில் ஒரு சிறு கள்ளநகை நடித்திருக்கலாம். தான் வாலியின்முன் வாய்ப்பூட்டிட்டுநின்றபொழுது உதவிக்குவந்து ஓர்காரணங்காட்டிக் காக்கப்புகுந்த இவ்விளவலை இராமன் இங்ஙனம் இழைத்திருக்கவேண்டா. ஆயினும் இது அவன் தனது தம்பியின்பால் வைத்த அன்பிற்கு மாறாயதன்று.

ஏவிய தியற்றப்புக்கஇலக்குவன்,அக்கருமத்திற்கு வேண்டியவைகள் அனைத்தும் அனுமனையனுப்பிக் கொணர்வித்து,

மறையோ ராசி வழங்க வானுளோர்
நறைதோய் நாண்மலர் தூவ நன்னெறிக்
கிறையோர் முன்வினை செய்ய வேந்தலைத்
துறையோர் நூன்முறை மௌலி சூட்டினான்.

[அந்தணர்கள் ஆசிகூற, தேவர்கள் தேன்பொருந்திய புதியமலர்களைத் தூவ, நன்னெறிகடைபிடித்த பெரியோர் முன்னின்று சடங்குகள் செய்ய, மெய்த்துறை படிந்துள்ள முனிவர் விதித்த சாஸ்திர விதிப்படி சுக்கிரீவனுக்கு முடிசூட்டினான்.]

எதிர்பாரா வகை, தன் மைந்தன் இவ்வண்ணம் சுக்கிரீவ மகாராஜனாது காண அக்கதிரவன் கழிபேருவகை எய்தியிருப்பான். எனினும் தனது அண்ணனுக்கு விட்டரசை வலியத்தந்து தான் வெற்றரசே பெற்றுக்கொண்ட இவ்வெதிர்நிலைப் பரிவருத்தனையின் பரிபவத்தை நினைக்குங்கால், பரிதியஞ்செல்வன் அத்துணைமகிழ்வதற்கு வழியில்லையென்றே எண்ணல் வேண்டும். சுக்கிரீவனுக்கு உரியதல்லாததுஅவ்வரசு. மாயாவியுடன் வாலி பிலத்தினுட் புக்கிருந்த அக்காலத்திலிவன் சிலநாள் அவ்வரியணை ஏறியிருந்தனன். அதுபற்றிஅவ்வரசு தனக்கேஉரியதென்று பாவித்துவிட்டான். வான்மீகத்தினில், தன்னுடையஅரசைத் தனக்கு மீட்டுத்தரும்படி இராமனை இவன்வெளிப்படையாக வேண்டுவது ஆசை சென்றவழி உரிமையுந் தோன்றத்தலைப்படுகின்ற வஞ்சனையை விளக்கிக்காட்டுகின்றது. கம்பர்நூலில் அப்படி வெளிப்படையாய்

* இவ்விடயங்கள் 1928 வருடத்து வால்யூம் 788-வது பக்கத்தில் விரிவுற விளக்கப்பெற்றிருக்கின்றன.



வேண்டப்படவில்லையாயினும், இராமன்'நின்தலைமையோடு நின்தாரமும் உனக்கின்று தருவேன்" என்று தானே பகர்ந்தபோது சுக்கிரீவன், "தலைமை யெனக்குரியதன்று, தாரமே வேண்டுகின்றேன்" என்று மறுத்தானல்லன். தானே வருவது வருகவென்று வாளாவிருந்துவிட்டான். தாரை புலம்பிய வண்ணம், எதிர் வந்து வாயினால் ஏவி இருப்பானாயின் வாலி அத்துணையும் உவகையோடு அளித்திருப்பான். அவ்வாறு நிகழ்ந்திருக்குமாயின், பிறவிதீர் அருமருந்தை (வாலியினால்) காட்டப்பெற்றும் அதனை அருந்தி உய்யும் வகை நினையாமல் குரக்கினத்தலைமையும் மண்ணரசின் மங்குறு செல்வமும், விழைந்து நிற்கின்றவோர் ஏழையின் தன்மையை நாம் எங்ஙனம் இத்துணை நுட்பமாய்த்தெரிந்துகொள்ளவல்லவர்கள் ஆவோம். மற்று, அங்கதன் அருமையையும் எங்ஙனம் அறியலாவோம். தன் தந்தையைக் கொன்றவனாயிருந்தும், அதனால் தனக் கவ்வரசு வரன்முறை வாராமற்போகியும், "மைந்தனே, இறைவன் இவன், வணங்குதி' என்று அத்தந்தை இயம்பியதை மெய்ம்மையெனக் கொண்டு இராமனை வழிபட்ட இவ்விளைஞன், பின்னர், எம்பெருமான் சீதையைச்சிறைமீட்டயோத்தியெய்தி அரியணையமர்ந்தபின், வந்திருந்தவிருந்தினர்களுக்கு விடைகொடுத்தபோது, "உன்னை நீயன்றி யிந்த வுலகினில் ஒப்பிலாதாய்" என்னப் பாராட்டியனுப்பப்பெறுவதற்குரியவனாயினான். இராமபிரான் மகுடாபிடேகஞ் செய்துகொண்ட காலத்து,

அரியணை யனுமன் றாங்க
அங்கத னுடைவா ளேந்தப்
பரதன்வெண் குடைக விக்க
இருவருங் கவரி வீச
விரைசெறி குழலி யோங்க
வெண்ணெயூர்ச் சடையன் றங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி

[அனுமன்சிம்மாதனத்தைத் தாங்கிநிற்கவும்,அங்கதன் உடைவாளை ஏந்தவும், பரதன் வெண்குடை பிடித்து நிற்கவும், இலக்குவனும் சத்துருக்கனும் கவரி வீசவும், வாசனைபொருந்திய கூந்தலையுடையசீதாபிராட்டி அருகிலே பொலிவுற அமர்ந்திருக்கவும், திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பவள்ளலின் தொல்குலமுன்னையோர்கிரீடத்தை எடுத்துக் கொடுக்க அதனை வசிட்டன்வாங்கி இராமனது சிரத்தில் சூட்டினான்]

என்றுகூறுவார் கம்பர்பெருமான். அந்தச்சடங்கில், உடைவாள் ஏந்திநிற்கும் பாக்கியமிவ்வங்கதனுக்கே வாய்த்தது. வாலி முன் கையடைதந்தபோது அங்கதனை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக இராமன், "நீ இது பொறுத்தி" என்று ஈந்த அவ்வாளேயாம் வாலியின் சேய் இங்கு வீறுபெற ஏந்திநிற்பது. வெண்ணெயூர்ச்சடையன் மரபுளோர்க்கும் அத்திப்பியச் சடங்கில் கலந்துகொள்ளும் பங்குகிடைத்தது. அரியணை தாங்கிய அனுமன் அளப்பரிய பெருமை பெற்றான்.சுக்கிரீவனும் அவன் துணைவன் வீடணனும் இதனை நெடிது நோக்கியே நின்றனர்.

நன்று,சுக்கிரீவன் மௌலிகவித்துக்கொண்டனன்; அதற்குக் காரணமாயிருந்த இராமனுக்கு, பின்னர்த் தன் கடமையைச் செலுத்தாமல் அயர்ந்தானேனும் இப்பொழுது வந்தனைசெலுத்தத் தாழ்ந்திலன்.

பொன்மா மௌலி புனைந்து பொய்யிலான்
தன்மா னக்கழ றொழும் வேலையில்
நன்மார் பிற்றழு வுற்று நாயகன்
சொன்னான் முற்றிய சொல்லி னெல்லையான்

[பொன்னாலாகிய சிறந்த கிரீடத்தைத் தரித்து, தான் கொடுத்த வாக்குப் பொய்க்காமல் அதனை நிறைவேற்றிய இராமனது பெருமை வாய்ந்த பாதங்களில் வணங்குமளவில், முதிர்ந்த சொற்றிறமையின் எல்லைகண்ட இராமபிரான் தன் அழகிய மார்பில் சுக்கிரீவனைத் தழுவிப் பின் சில சொல்வானாயினான்.]

அரச நெறிமுறை அமையவேண்டியவகை இங்கு இராகவனால் சுக்கிரீவனுக்கு விரித்துரைக்கப் பெறுகின்றது. வசிட்டன் வாயினின்று தா னதனை முன் ஓர் முறை கேட்டுளன் இவ் விராமன். சுக்கிரீவனது இனத்தையும் இயல்பையும் கருதுங்கால், வசிட்டன் தனக்கு முன் வாளா உரைத்தவைகளை முழுமையாக இவனுக்கு மாற்றிவிடலாகாதென்பதை உணரவல்லவன் இராமன் ஆதலின், அதனிற் சிற்சில பகுதிகளைத்தான் இவன்வயின் பகர்கின்றனன். அதுவுமன்றி, திருக்குறளின் பொருட்பால் தந்திரத்திற்கு மேல் உணர்ந்தொழுகும் ஆற்றல் இல்லாதவன் இச்சுக்கிரீவன் என்பதை வாலி கண்டுகொண்டு இறுதியில் அந்நிலைக்கு உரியவைகளே எடுத்துச் சொல்லியதைத் தழுவி இராமனும் "பொருட்பாலையே" பெரிதிங்குத் தன்புத்தியில் வைத்துப் பேசலுற்றான். இவ்வாறு, பொன்முடி கவித்துவந்து வணங்கிய வானரராஜனுக்குச் சிலஉறுதிகள் கூறி அறிவுறுத்த நினைத்த இராமபிரான்,

ஈண்டுநின் றேகி நீநின்
இயல்பமை யிருக்கை யெய்தி
வேண்டுவ மரபி னெண்ணி
விதிமுறை யியற்றி வீர
பூண்டபே ரரசுக் கேற்ற
யாவையும் புரிந்து போரின்
மாண்டவன் மைந்த னோடும்
வாழ்திநற் றிருவின் வைகி

[வீரனே நீ, இவ்விடம் விட்டுச் சென்று, உனக்கு இயல்பாக அமைந்த கிட்கிந்தையை அடைந்து, நீ செய்யவேண்டியவைகளை முறையாக ஆலோசித்து, அவைகளை விதிப்படி செய்து, நீ ஏற்றுக்கொண்ட இந்தப்பெரிய அரசிற்கு உரியவைகளை யெல்லாம் இயற்றி, போரில் இறந்த வாலியின்மைந்தன்அங்கதனோடு நல்லசெல்வத்தில் நிலைபெற்று வாழ்வாயாக.]

என்னத் துவக்கலானான். அரசாட்சி அமைதிபெற வேண்டுமானால் சுக்கிரீவன் அங்கதனோடு ஒன்றிவாழ்வது மிகவும் அவசியம். அதனில் ஐயமில்லை. மற்று, அவ்வாலிதான்போரில் மாண்டனனோ என்பதுதான் ஐயம் பெரிதுடைத்து. இச்செய்தி சொல்லொக்கும், பொருளொவ்வாது. "போரின் மாண்டவன்" என்று கூறாமல், "என் கை மாண்டவன்" என்று இராமன் இயம்பியிருந்தாற்றான் இந்த வாசகம் உண்மையை

நெருங்கி நிற்கும். போரிற்றான் மாண்டனன் வாலி என்னும் ஒரு வதந்தியை இங்ஙனம் விளைவிப்பது சுக்கிரீவனது மனச்சாக்ஷியைத் தணிவித்தல் பொருட்டு இராமன் செய்கின்றவொரு சிறு வுதவியாயிருக்கலாம். வேறென். வாலி போரில்மாண்டான் என்னும் வாசகம் பொய். "பொய்யிலான்" என்னக் கம்பர் முன்னைய பாசுரத்திற்றானே இவனைப் புகழ்ந்திருந்தும்இராமன் தன் புலவனைத் தானே மறுத்துப் பொய்யே புகலப்புக்கான். ஏன்?

தன்னுடைய பரத்துவத்தை வாலி சுக்கிரீவனுக்கு எடுத்துச்சொல்லியவைகளையெல்லாந் தானே கேட்டுக்கொண்டிருந்தான் இராமன். அவையொன்றும் அச்சுக்கிரீவன் உள்ளத்தில் ஊன்றாமற் போனதையுங் கண்டான். ஆதலின் மனிதனென்னுமுறையிற்றானே தன்னொடு அச்சுக்கிரீவனை வாலி தொடர்பு படுத்தி முடித்ததன் நட்பத்தையும் உணர்ந்தான். எனின், மானுட உபாயங் கடந்த ஓர் மேலான தத்துவத்தை இங்குத் தெய்வமாய்நின்று சுக்கிரீவனுக்குப் போதிப்பதன் பயனின்மையை, இங்கிதம் அறியும் ஆற்றலில் வல்ல அயோத்திப்பெருமகன், உள்ளியுணர்தல் அருமையன்று. மண்ணிலேயிருந்து மண்ணையாண்டு மண்ணொடு முடிகின்ற மன்னவர்க் குரியவைகளையே இக்குரக்கினத்தலைவனுக்கு இன்று உரைத்தல் வேண்டும். அதனை அவன் அவ்வாறே கொள்ளவும் வேண்டும். அதனிற்குத் தன்னை ஒரு மனிதனென்றே சுக்கிரீவனுக்கு நிச்சயப்படுத்தவேண்டுவதன் அவசியத்தை இராமன் அறிந்துகொண்டான். "வாலி என் தன்மையைப்பற்றி இயம்பியவைகளை நீ நம்பாமையுடன், நீ அவைகளை நம்புதல் வேண்டும் என்னும் எண்ணம் எனக்கும் இல்லை கண்டாய்.நான் இவ்வுலகின்கண் உள்ள ஏனைய மனிதர்களைப் போன்ற ஒருவன் தான். அன்னமனிதன் ஒருவனின்னொருவனுக்கு எடுத்துக் காட்டுகின்ற உறுதிகளின் திறத்தளவே என்னுடைய மொழிகளை நீ ஏற்றுக்கொண்டு ஒழுகினைற்போதும்" என்று தன்னுடைய கட்டுரைக்குப் பாயிரம் ஒன்று கூறாமல் கூறியதுபோன்று நிற்கின்றது, "போரில் மாண்டவன்" என்று வாலியை வகுத்துரைத்த இவ்வாசகம். தான், வாலியுரைசெய்த அம்மெய்ப்பொருள் இன்றி ஒரு மனிதனே என்பதற்குப் பொய்மொழி ஒன்றுபோதியசான்றாகுமன்றோ;எனின் இவ்வொரு பொய்யினால் தான் மனிதனேஎன்பதைச் சுக்கிரீவன் மனதில் ஐயமற, வாலியின் வாய்மையனைத்திற்கும் மாறாக, நிறுவித் தெளிவித்துவிடுகின்றான். இது இராகவன் நடிக்குஞ் சூழ்ச்சிகளில் ஒன்று. பிற்றைநாள், இலங்கைப் போர்க்களத்தில் இந்திரசித்தன் ஏவிய பிரம்மாத்திரத்திற்கு உடைந்த கிடந்த வானரத்தலைவர்களையும் தன் தம்பி இலக்குவனையுங் கண்டு நெஞ்சம்பிளக்கஅழுதழுது அரற்றியஇராமனது நிலையை நோக்கிய தேவர்கள் தாமும் ஆற்றாப் பரிவுகூர்ந்து, உண்டோ இவன்பால்துன்பம்எனத்திகைத்தவராகி,

ஈன்றெம் மிடுக்கண் துடைத்தளிப்பான்
இரங்கி யரச ரிற்பிறந்தாய்
மூன்று முலகந் துயர்தீர்த்தி
யென்னு மாசை முயல்கின்றேம்
ஏன்று மறந்தே மவனல்லன்
மனிச னென்றே யிதுமாயம்
போன்ற தில்லை யாளுடையாய்
பொய்யும் புகலப் புக்காயோ

என்ன வினவுங்கால் இந்த இரகசியம் வெளியாகின்றது. தேவனே யென்னத் தன்னைக் கொள்ளவேண்டாமல், இராமன், மனிதன் என்றே மாயாஞ் செய்ய நினைப்பதாயின் பொய்யும்புகலப் புகுகின்றான். கேட்போர்க்கு இது பொய்யென்று தெரியாவிடின் இம்மாயத்தால் பயனில்லை. வாலியோ போரில் மாண்டானல்லன் என்பதைச் சுக்கிரீவன் அறியானாயின் வேறு யார் அறிவார். அன்ன சுக்கிரீவனிடத்தில், இந்த இராமனே, "போரில் மாண்டவன்" என்று வாலியைப் பேசுவது "பொய் பொய்" என்று தனக்குப் பட்டங் கட்டிக் கொண்டிருக்கின்றவொருவாசகம். மனிதன் என்றே அவன் செய்யும் மாயம் பயன் பெறுவதற்கு ஐயம் இல்லை. மனித இனத்திற்கு இது பேரபவாதமாகலாம்—அதற்கென் செய்வது!

---

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

7-ம் பத்து 1-ம் தசகம்

[781-வது பக்கத் தொடர்ச்சி]

7-ம் பாசுரம்.

ஒன்று சொல்லி யொருத்தினில்
நிற்கிலாத வோரைவர் வன்கையவரை
என்றுயான்-வெல்கிற்ப
னுன்றிருவரு ளில்லையேல்
அன்று தேவ ரசுரர் வாங்க
வலைகட லரவ மளாவியோர்
குன்றம் காத்த வெந்தாய்
கொடியேன் பருகின் னமுதே.

அவதாரிகை:—இதுவரையிலே நீர் நம்மை யநுபவிக்க இவ்விந்திரியங்கள் இடையூறாக விருந்து ஐம்புலன்கள்விடயங்களி லகப்படச்செய்யவில்லையே, அதுபோல் இனியும் நீரே நிர்வஹித்துக்கொள்ளக்கூடாதாவென்று பகவான் கேட்டதாகக்கொண்டு ஆழ்வாரிப் பாசுரத்தில் பதிலளிக்கிறார்.

குறிப்புகள் :— ஒருத்தினில் + நிற்கிலாத-ஒருத்து-ஓரேபடியாயிருக்கும்படி நிறுத்தினாலும், நிற்கிலாத-க்ஷணத்துக்குக்ஷணம் மாறுந் தன்மையுள்ள - தக்கணமே தான் ஆசைப்பட்டதை அடையவேண்டுமெனவும், ஒன்று சொல்லி ஒருபுலன் தனக்கு இதுவேண்டுமென்றுகுறிப்பிட, இதுபோலவே ஒவ்வொரு இந்திரியமும் நிர்ப்பந்தித்து, அடையும் முன்பேயே வேறொன்றை யபேக்ஷிக்கின்ற ஸ்பாவமுள்ளதாகையால்பிரபலரென்றும் அடக்கத்தக்க தல்லவென்றும் திருவுள்ளப்படுகிறபடி.

தமது ஸ்வயமுயற்சியால் ஸாதிக்க இயலாததைத் தேவர்களும்கூடப் பகவானது திருவருளால் அல்லவோ முடித்துக் கொண்டார்கள்? அமிர்தங்கடைந்த காலத்தில் தேவர்களாலும் அசுரர்களாலும் கடல் நீரைச்சுழற்றிக் கடையஸாத்தியமில்லாமல் கைவாங்கிப்போனபோது பகவான் அல்லவோமந்தாபர்வதத்தை மத்தாக்கி வாஸுகி என்ற பாம்பைக் கயிறாகப் பூணைந்து தம் திருக்கைகளால் மத்து அலைந்து சிதறாமல் பற்றி அமிர்தம்கடைந்து கொடுத்தாரென்று பகவானுக்கு விண்ணப்பஞ் செய்கிறார்.

இதுவரையில் உன்னை நான் அமிர்தம்போலவே அநுபவிக்கும்படி கொடுத்தாய், இனியும் என்பாவங்களைப்போக்கிஉன்னைநிரந்தரமநுபவிக்கக் கரணகளேபரங்களைத் தவிர்த்தருள வேணுமென்று பிரார்த்திக்கிறபடி.

ஒருத்து - "ஒருமைப்பாடு" என்று ஈட்டுரையின் வியாக்கியானம். அடுத்த பாசுரத்தில், மனம் வாக்கு காயங்கள் ஒருமித்துப் பகவானைத் தொழவேண்டுமென்று பிரார்த்தனை செய்வதைக் காண்க. ஒவ்வோரிந்திரியம் ஒவ்வொரு விடயத்தில் தூண்ட ஒருமைப்பாடு இல்லாமல் மனஞ் சஞ்சலப்படுவதென்று தாத்பரியம்.

---

8-ம் பாசுரம்.

இன்னமு தெனத்தோன்றி யோரைவர்
யாவரையும் மயக்கநீ வைத்த
முன்னமாய மெல்லா முழுவேரரிந்
தென்னையுன்
சின்னமுந் திருமூர்த்தியுஞ் சிந்தித் தேத்திக்
கைதொழவே யருளெனக்கு
என்னம்மா வென்கண்ணா விமையோர்தங்
குலமுதலே.

இமையோர்தம்-நித்தியஸூரிகளின்,குலமுதலே - தலைவனே, இன் - வெகு ரஸமான, அமுதம் என - அமிர்தம்போலத் தெவிட்டாத ஆநந்தமயமாய், தோன்றி-அநுபவவேளையிலே அமிர்தமே எனத்தோற்றுவித்து, ஓர் - ஆச்சரியமான, ஐவர் - பஞ்சேந்திரியங்கள்,யாவரையும்-பிரம்மாமுதல்யாவரையும், மயக்க- உன் விஷயத்திலும் தனக்கு ஸாதனமான புருஷார்த்தத்திலும் விபரீதஞானம் உண்டாக்க, நீ - ஸர்வசக்தனான நீ, முன்னம்வைத்த - முன்னாலேயேஏற்படுத்தி வைத்த, மாயம் எல்லாம் - பிருகிருதி ஸம்பந்தத்தையெல்லாம் ("மாயாந்து பிரகிருதிம் வித்தியாத்" என்று பகவத்கீதையில்பணித்தபடி பொருள்கொள்வது உசிதம்) வேர் அரிந்து- அடியோடே களைந்து என்னை, உன் சின்னமும் - நீ தரித்திருக்கும் சங்கம் சக்கரம் சாரங்க பத்மம் கட்கம் முதலியவற்றையும், திருமூர்த்தியும் - உன்னுடைய வடிவமாகிய திவ்விய மங்கள விக்கிரஹத்தையும், சிந்தித்து-மனதால்தியானித்து, ஏத்தி-துதிசெய்து வணங்கி,கைதொழ - கைகூப்ப, (ஏ - மற்றவை வேண்டாவென்று பிரிநிலை), எனக்கு- அடியேனுக்கு, அருள் - நீ அருள்புரி, என்னம்மா - குற்றம்பாராட்டாமல் தாய்போல் ஸஹஜகிருபையால் காப்பாற்றுகின்றவனே, என் கண்ணா- எனக்கு விசேஷ பிரியத்தையும் ஆநந்தத்தையும் உன் திவ்விய தரிசனத்தால் அளிப்பவனே:—

கருத்து:— ஸ்ரீயப்பதியாகிய தான் ஸமஸ்த கலியாண குணத்மகனாயிருக்கிற விருப்பைக் காட்டி ஸர்வேசுவரனான திருமால் இவ்வாழ்வாரின் "அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து" பக்திரூப ஸ்நேஹத்தையும் நிர்ஹேதுகமாய் இவ்வாழ்வாருக்கு முதலடியிலேயேகடாக்ஷித்தருளினான் - தான் ஒருவனே உபாஸிக்கத் தக்கவனென்னுமிடத்தையும், அவன் தானே காட்டிக்கொடுக்கக் கண்டு அவனுடைய அநுபவிப்பதற்கு இத்தேஹஸம்பந்தம்விரோதியாயிருக்கையாலே அநுபவவிரோதியான தேஹஸம்பந்தத்தை அறுத்துத்தந்தருளவேண்டுமென்றிங்குப் பிரார்த்திக்கின்றார்.

---

9-ம் பாசுரம்.

குலமுத லடுந்தீவினைக் கொடுவன்
குழியினில் வீழ்க்கு மைவரை
வலமுதல் கெடுக்கும் வரமே
தந்தருள் கண்டாய்
நிலமுதலினி யெவ்வுலகுக்கும் நிற்பன
செல்வன வெனப்பொருள்
பலமுதல் படைத்தா யென்கண்ணா
வென்பரஞ் சுடரே.

உரை:— நிலமுதல் - இவ்வுலக முதலாக, இனி - இன்னமுள்ள, எவ்வுலகுக்கும்-எல்லா உலகங்களும் பூர்ணமாகநிறைவுபெற, நிற்பன - ஸ்தாவரங்களும், செல்வன - அசையும் வஸ்துக்களும், என - இவைகளைப்போன்ற, பொருள் பல - வெகுபதார்த்தங்களை, முதல் படைத்தாய் - யாதொரு பொருளும் இல்லாமல் சூனியமாயிருந்த யுக ஆரம்பத்தில் ஓரே வஸ்துவிருந்ததாகச் சொல்லப்படும் அந்தக்காலத்தில் உன் சங்கல்பசக்தியால் சிருஷ்டிசெய்தருளினவனே, என் கண்ணா - எனக்குப்பிரியமான கிருஷ்ணபகவானே- (எல்லா அவதாரங்களையும் இங்கு எடுத்து உரைப்பதாகக் கொள்ளவேண்டும்) என் பரஞ்சுடரே - எனக்கு மனோஹரமான தேஜஸையுடையவனே - (பக்தர்களுக்கு உதவவென்றே "மஹா ஆச்சரிய சக்தியையுடையவனே" என்று தொனி) குலமுதல் - தலைவர்களான ஸமூஹ பெரியார்களையும், அடும் - (இக்கூட்டில்சேர்ந்திருக்கும் ஸாமானியன் செய்கிறபாவங்கள் கூட்டுத் தலைவரையும் தொடர்ந்து பீடிக்குமென்று கருத்து)கெடுக்கும், தீவினை-தீச்செயல்களாகிய கொடு - குரூரமான, வன் - வலிதான, குழியில்-நரகாநுபவத்தில், வீழ்க்கும் - தள்ளி விழுத்தும், ஐவரை - பஞ்சேந்திரியங்களின், வலமுதல் - பலமானசக்தியை, கெடுக்கும் - தணித்து அழிக்கின்ற, வரமே- (தத்கால நோக்கமாக நான் அபேக்ஷிக்கிற) வரத்தையே, தந்தருள் - நீகொடுத்தருளவேண்டும் கண்டாய், இந்த அநிஷ்டநிவர்த்தியையேகணிசித்து யான் யாசிக்கின்றேன்.

---

10-ம் பாசுரம்.

என்பரஞ்சுடரே யென்றுன்னை யலற்றி
யுன்னிணைத் தாமரைக
ட்கன்புருகி நிற்குமது நிற்கச்
சுமடு தந்தாய்
வன்பரங்க ளெடுத்தைவர் திசைதிசை வலித்
தெற்றுகின்றனர்
முன்பரவை கடைந்தமுதங் கொண்ட
மூர்த்தியோ.

பதக்குறிப்புக்கள்:— என் பரஞ்சுடரே - எனக்கு ஜோதிமயமாய் விளங்கி என் னிஷ்டங்க ளெல்லாம் முடிக்கவல்ல சக்தியுள்ளவனே, அலற்றி - உன்னைக் குறித்து வருந்தி, முன் பரவைகடைந்து - முற்காலத்தில் சமுத்திரத்தைத் தேவர்களுக்காக அமிர்தம் திரட்டக் கடைந்து - இச்சரித்திரம் எடுத்துரைத்தது - ஆச்ரிதருடைய அபேக்ஷையை முடிக்கவல்லன், முடித்துக் கொடுப்பவன், தாம் அபேக்ஷிப்பதை முடித்

199197

82
M211,N28KN
N34.247

துக் கொடுப்பானென்பது— உன் இணைத் தாமரை கட்கு - உன் திருப்பாத மூலங்களாகிய தாமரைப் பூக்கட்கு, அன்பு உருகி நிற்கும்-அன்பானது நீராய்க் கரைந்துருகும்-இம்மஹான்“மரங்க ளிரங்கும் வகை மணிவண்ணவோ” என்று மனமுருகிப் பகவானைக் காண ஏங்கிக் கரைந்தவாறு, அது நிற்க - இது இப் படியிருக்க - என் ஆத்மாவுக்கு இவ்வண்ணம் உன் பால் நேசத்தினால் உருகி நிற்பது உசிதமாயிருக்க, சுமடு தந்தாய் - இந்திரியங்கள் ஏவிச் சுமக்கச்சொல் லும் விஷயங்களான பாரங்களைத் தூக்கி அங்குமிங் கும் செல்லச் சும்மாடு தந்தாய், வன்பரங்களெடுத் துத் திசை திசை வலித்து ஐவர் எற்றுகின்றனர்-பல இன்ப நுகர்ச்சிகளுள்ள விஷயங்களை இங்கு மங்குந் தேடி இரஸமாயநுபவி என்ற வீணான பிரயத்தனங் களைச் செய்யச்சொல்லி அலமரும்படி இந்தரியங் கள் நடாத்துகின்றன.ராஜபுத்திரன் ஒருவன் தன் கிரீ டத்தை எடுத்துவிட்டுச் சும்மாடுந் தலையுமாய் வழியி லே நின்றால் அறியாதார் இவன் தலையிலே சுமையை எடுத்துவைத்துப் போவார்போலே இந்த அல்பமான சரீரத்தோடே இருக்கின்ற வென்னை இந்தரியங்கள் விஷயங்கள்தோறு மிழுத்துப் பிடியாநிற்கின்றன என்பது கருத்து';—இருபத்துநாலாயிரப்படி.

---

11-ம் பாசுரம்

கொண்ட மூர்த்தியோர் மூவராய்க்
குணங்கள் படைத்தளித்துக் கெடுக்கும்
அப்புண்டரீகக் கொப்பூழ்ப் புனற்பள்ளி
யப்பனுக்கே தொண்டர்
தொண்டர் தொண்டர் தொண்டன்
சடகோபன்சொல்லாயிரத்துளிப்பத்துங்
கண்டு பாடவல்லார் வினைபோங்
கங்குலும் பகலே.

உரை:—குணங்கள் கொண்ட - ஸத்துவ குணத் தைக்கொண்ட ரக்ஷகனான விஷ்ணு அவதாரமூர்த்தி யாயும், உலகங்களைப் படைக்கும் ரஜோ குணத்தைக் கொண்ட பிரம்மா மூர்த்தியாகவும், தாமஸ குணத் தை மேலிட்டுக்கொண்டு உலகங்களை ஸம்ஹரிக்கும் உருத்திர மூர்த்தியாகவும், ஓர் - ஆச்சரியமான, மூவ ராய் - மூன்று மூர்த்திகளாய்க் காத்துப் படைத்துக் கெடுக்கும், அ - மகிமை தங்கிய, கொப்பூழ் - நாபிக் கமலத்தில் பிரம்மனைவளர்த்தகொப்பூழுடன்,புனல் பள்ளி - உலகங்களைப் பாதுகாப்பதற்கு க்ஷீராப்தியில் படுத்துக் கண்வளர்கின்ற, அப்பன் - ஜகத்துக்களைப் படைத்து அழித்துக் காக்கும் தந்தைக்கு,தொண்டர் தொண்டன் சடகோபன் - ஆழ்வார், சொல்லாயிரத் துள் இவைபத்தும், கண்டு - பாவ புஷ்டியுடன், பாட வல்லவர், கங்குலும் - ராத்திரியிலும், பகலும் - பக லிலும் அதாவது இரு காலத்திலும் அதாவது எல் லாக் காலத்திலுந் தொடர்ந்து,பகவானை விட்டுத் துய ரப்படும்படிசெய்யும்,வினை-பாபங்களெல்லாம்,போம் -நசித்துப்போம், அதாவது பிரகிருதி ஸம்பந்தத்தை உண்டாக்கிப் பிடிக்கும் பாவங்கள் நசித்துப்போம்.

இத்தசகத்தின் கருத்து:—சென்ற 6-ம் திருவாய் மொழி ஒன்பதாம் தசகத்தில் ஒன்பதாம்பாசுரத்தில் இவ்வாழ்வார் “ஆவிதிகைக்க ஐவர் குமைக்கும் சிற்றி ன்பம்” நல்லறிவைக்கெடுக்கும் ஹேதுவாய்த் துக்கங் களோடு கலந்ததாய் அதியல்பமாயும் அஸ்திரமாயுமு ள்ள விஷய ஸுகத்தைக் காட்டி அவை, பகவானைத் தாம் இழக்கச்செய்து தரைப்படுத்துமென்ற காரண த்தால்ஆழ்வார்பகவான் தம்மைத் தன்திருவடிகளுக் குக் கூவிக்கொள்ள வேண்டுமென்று முறையிட்டார். பிறகு பத்தாம் தசகத்தில் பகவான் “நோன்பு” நோற் கக் கட்டளையிட்டாரைக்கொண்டு சரணாகதி உபா யம், “அகல கில்லேன்” இல் (10-ம் தசகம் 10-ம் பாசுரம்) அநுட்டானம் செய்யத் திருவேங்கட மு டையான் சந்நிதியில் அலர்மேல்மங்கை புருஷகார மாகச் சரணமடைந்து புகுந்தார். இப்படிச் செய்தும் பகவான் பிரகிருதி ஸம்பந்தத்தை ஆழ்வார் வேண்டு கோளின்படி தவிர்த்துத்தரவில்லை. இவ்வாழ்வாரைக் கொண்டு திருவாய்மொழி கிரந்தத்தை முடிக்கவேண் டிய எண்ணத்தால் தாமதிக்கவே இத் தசகத்தில் பல வாறுநொந்துமனக்கிலேசப்பட்டுப்பகவானே நம்மை ஹிம்சிப்பதாகக் கோபித்து வெருண்டு பகவானிடத் தில் தமக்குள்ள ஆதரவைப் பற்றாசாகக்கொண்டு 7ம் திருவாய்மொழி 1ம் தசகத்தில் பலபடி நிந்தித்தார். இந்நிந்தைகளெல்லாவற்றையும் பகவான் க்ஷமித்துப் பொறுத்தருளினானென்றும் ஆழ்வாரின் நேசத்தை வளர்த்தானென்றும் பூர்வாசாரியர்களின் நிர்வாஹ ம். எங்ஙனமிதுகண்டபடியென்பது நாம்ஊஹித்தறி யவேண்டும். அதில் 7ம்பாசுரத்தில் “கொடியன்பருகு மின்னமுதே” என்றார். பகவானின் ஸௌந்தரியமும் திவ்விய குணங்களும் தனக்கு இந்திரியங்கள் தடுத்து விலக்கினாலும் தம்வினைகள் தடுப்பதேயன்றித் தமக்கு அமிர்தமா யிருக்கிறதென்றார். 8-ம் பாசுரத்தில் இ மையோருக் கிருப்பதுபோல் பகவான் தமக்கும் குல முதலாக விருப்பதாகப்பேசி மனோவாக்கு காயங்கள் அவனை ஒருங்கே சேர்ந்து “என் கண்ணா” வென்று இப்பவும் அநுபவிக்க வேண்டுமென்கின்றார். அடுத்த பாசுரத்தில் கண்களுக்கும் மனகண்ணுக்கும் இனிப் பாயிருக்கிறதென்றும் இந்திரியங்களால் தட்டுதடை முதலிய இடையூறு பிடிக்காமல் பரஞ்சுடராய்த் தம் மை உய்வித்ததென்கின்றார்- தம் மனம் முன்போல் அவனிடத்தில் உருகிநிற்கிற தானாலும் தமக்குப் பிர கிருதி ஸம்பந்தம் ஒவ்வாத அநிஷ்டமாகையால் தீர்த் தருளவேணுமென்று முடிப்பதால் பகவானுக்குஆழ் வாரிடத்திலன்பு வளர்ந்துவருவதென்று கூறும் பெ ரியோர் பாசுரம் உண்மையென் றறியத்தக்கது.

---

# தமிழ்ப்பாடம் 147.

[728-வது பக்கத் தொடர்ச்சி]

## இலக்கணம்

### னகர மெய்யீறு.

III (b) நிலைமொழி யிறுதியில் னகரமெய் + வரு மொழி முதலில் தகரமெய்.

(1) வருமொழி முதலில் ககர சகர பகரங்கள் நிற்க, எவ்வெவ் விடங்களில் நிலைமொழியீற்று னகர மெய் றகரமெய்யாகத் திரியுமோ, அவ்வவ் விடங்க ளில் தகரமெய் நின்றாலும் அந்த னகரமெய் றகர மெய்யாகத் திரியும்; இந்த னகாரஈறு றகரமெய்யாய்த் திரிவதுமாத்திரம்அன்றி வருமொழி முதலில் நின்ற தகரமும் பெரும்பாலும் றகரமாகத் திரியும்:—



| | |
|---|---|
| பொன் + குடம் = பொற்குடம்<br>பொன் + தட்டு = பொற்றட்டு | 3-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. |
| கையான் + பிடித்தேன் = கையாற் பிடித்தேன்<br>கையான் + தொட்டேன் = கையாற் றொட்டேன். | மூன்றாம் வேற்றுமை யுருபு. |
| பொன் + குன்று = பொற்குன்று<br>பொன் + தார் = பொற்றார். | பண்புத்தொகை. |
| மலையின் + பெரிய தோள் = மலை யிற் பெரியதோள்<br>அமிழ்தின் + தித்திக்குஞ்சொல் = அமிழ்திற் றித்திக்குஞ்சொல். | ஒப்புப் பொருளில் வந்த 5-ந்தாம் வேற்றுமை இன்னுருபு. |
| உடலின் + பிரிந்த உயிர் = உடலிற் பிரிந்த உயிர்<br>மலையின் + தீர்ந்த அருவி = மலையிற் றீர்ந்த அருவி. | 5-ந்தாம் வேற்றுமை நீங்கற் பொருள். |
| கொடுப்பின் + சொல்வேன் = கொடுப் பிற் சொல்வேன்<br>நடப்பின் + தொடர்வேன் = நடப்பிற் றொடர்வேன் | செயின் என்னும்வாய்பாட்டுவினை யெச்சம். |
| கற்றார்முன் + சென்றான் = கற்றார்முற் சென்றான்<br>கற்றார்முன் + தோன்றா கழிவிரக்கம் = கற்றார்முற் றோன்றா கழிவிரக்கம் | முன், என்னும் ஏழாம் வேற்றுமை யுருபு. |
| மனைவயின் + பார்த்தேன் = மனைவயிற் பார்த்தேன்<br>மனைவயின் + தங்கினான் = மனைவயிற் றங்கினான் | வயின், என்னும் ஏழாம் வேற்றுமை யுருபு. |

குறிப்பு:—என் தன் என்னும் சொற்களி னீற்று னகரமெய் ககர சகர பகரங்கள் வர றகரமாகத் திரியு மிடத்தும், வருமொழிமுதல் தகரமெய் வருமானால் அந்த னகரமெய் றகரமெய்யாகத் திரியாமல் வரு மொழிமுதல் தகரமெய் மாத்திரம் றகரமெய்யாகத் திரியும்.

| | |
|---|---|
| தன் + சிறப்பு = தற்சிறப்பு<br>தன் + தலை = தன்றலை | |
| என் + புகழ் = எற்புகழ்<br>என் + தாதை = என்றாதை | |

(2) நிலைமொழியீற்று னகரமெய்,வருமொழி முத லில் ககர சகர பகரங்கள் நிற்க, எவ்வெவ்விடங்களில் றகரமாகத் திரியாமல் இயல்பாயிருக்குமோ அவ்வவ் விடங்களில் தகரம் நின்றாலும் இயல்பாயிருக்கும். ஆனால்வருமொழிமுதலில் தகரமெய் மாத்திரம் றகர மெய்யாகத் திரியும்.

| | |
|---|---|
| பொன் + கொடுத்தான் = பொன் கொடுத்தான்<br>பொன் + தந்தான் = பொன்றந் தான் | இரண்டாம் வேற்றுமைத் தொகை. |
| தின் + சோறு = தின்சோறு<br>தின் + தினை = தின்றினை | வினைத்தொகை. |
| உண்பான் + சென்றேன் = உண்பான் சென்றேன்<br>உண்பான் + தங்கினேன் = உண்பான் றங்கினேன் | வானீற்று வினையெச்சம். |
| பிறப்பான் + பின்னை = பிறப்பான்பின்னை<br>பிறப்பான் + தனயன் = பிறப்பான் றனயன் | வினை முற்றுத் தொடர். |

| | |
|---|---|
| ஒன்றன் + தொகுதி = ஒன்றன் றொகுதி<br>நீரின் + தண்மை = நீரின் றண்மை<br>ஆன் + தோல் = ஆன்றோல் | னகர ஈற்றுச் சாரியைகள். |

குடிப்பவன் + தன்மை = குடிப்பவன் றன்மை— வினையாலணையும் பெயர்.

குறிப்பு:—வெண் திண் நுண் தண் போன்ற பண் படிகளின் ஈற்று ணகர மெய், வருமொழி முதலில் வல்லினம் நிற்க, டகரமாகத் திரியாமற் புணர்வது போன்றே (708-வது பக்கம்), இன் வன், புன், போன்று பண்புப் பெயர்கள் விகாரப்பட்டு நிலைமொ ழிகளாய் நிற்குங்கால், அவ்வீற்று னகரமெய் றகர மாகத் திரியாது வருமொழி முதல் வந்த தகரம் மாத்திரம் றகரமாகத் திரியும்.

| | |
|---|---|
| வன் + பழி = வன்பழி.<br>வன் + தாள் = வன்றாள் | |
| இன் + சொல் = இன்சொல்<br>இன் + துயில் = இன்றுயில் | |
| புன் + பொறி = புன்பொறி<br>புன் + தலை = புன்றலை | |

அவ்வாறே, 'ஙனம்' என்னுஞ் சொல் ஈறுகெட்டு ஙன் என நின்று, அங்ஙன் இங்ஙன் எங்ஙன் என வருங்கால் அதனீற்றிலுள்ள னகரமெய், வருமொழி முதலில் வல்லினமெய் வர, றகரமாகத் திரியாது. வருமொழிமுதல் வந்த தகரம் மாத்திரம் றகரமாகத் திரியும்.

இங்ஙன் + கூறினான் = இங்ஙன் கூறினான்.
இங்ஙன் + தேம்பினாள் = இங்ஙன் றேம்பினான்.
எங்ஙன் + செல்வேன் = எங்ஙன் செல்வேன்.
எங்ஙன் + தேடுவேன் = எங்ஙன் றேடுவேன்.

இப்படியே, மான்றோல், மகன்றலை, அரசன்றிரம் என மற்ற உதாரணங்களையும் அமைத்து நோக்கிப் பயின்றுகொள்க.

குறிப்பு:—உயிரீற்றுச் சொற்களின்பின்னர் வரு மொழிமுதல் வல்லினமெய் இரண்டாம்வேற்று மைத் தொகையில் மிகாதென்றும், ஆனால் 'புலி கொன்ற யானை' என்பதுபோல் இரண்டாம்வேற்று மைத் தொகை எழுவாய்த்தொடரோடு மயங்கும் இடங்களில், இரண்டாம் வேற்றுமைத் தொகையா யின் புலிக் கொன்ற யானை என வலிமிகுந்தும், எழு வாய்த் தொடராயின் புலி கொன்ற யானை என மிகா மலும் புணரும் என்றும் முன்னர்க் கூறியிருப்பது நினைவில் இருக்கலாம். (198-வது பக்கம்) இப்படியே னகர மெய்யீற்றுப் புணர்ச்சியிலும் நினைவிற் கொள் வதற்கொன்றுளது.

'அரசன் கொன்ற புலி, என்னும் இவ்வாக்கியம் அரசன் புலியைக் கொன்றானென்றேனும், புலி அர சனைக் கொன்றதென்றேனும் பொருள்கொள்ள இடந்தரும். சந்தர்ப்பத்தின்படி கொல்லப்பட்டது புலியானால் 'அரசன் கொன்ற' என்பது எழுவாய்த் தொடர்—னகர மெய் இயல்பாகப் புணரும். ஆனால் கொன்றது புலியானால் 'அரசன் கொன்ற' என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை. இப்படி மயக்கம் விளையக்கூடிய இடங்களில், பொருளின்படி இரண் டாம் வேற்றுமைத் தொகையில் அரசற் கொன்ற யானை,என நிலைமொழி யீற்று னகர மெய் றகரமாகத் திரிந்தும், எழுவாயாயின் 'அரசன் கொன்ற யானை. எனத் திரியாமலும் புணரும் என்று கொள்ளலாம்'

# தருமன் மாண்பு

கலாநிலயம் நாற்பதாவது இதழில், திருவாளர் நணிகாசல முதலியாரவர்கள், "பாரதக் கதை நர-நாராயணர் விசயமாகும்" என்று தலைப்பிட்டு, பாரத கதா நாயகர் யார் என்பதைப் பற்றி ஆராய்கையில் 'வணங்காமுடி மன்னன் முதலானோரில் கதாநாயகனாக எடுத்துக் காட்டக் கூடியவன் ஒருவனுமில்லை. இடை வள்ளல்களில்ஒருவனாக எடுக்கப்பட்ட கர்ணனும், இருந்தபோது பெற்ற சிறப்பைக் காட்டிலும் இறந்தபின் சிறப்பு அதிகரிக்க விளங்கினனெனினும் கதாநாயகனாயவனையும் எடுத்துக்காட்ட வியலாது' என்று கூறியுள்ளார். கர்ணனது குணக்குறைபாடுகளையும், நகைக்கிடமான புறவியல்புகளையும் விரிவாக எடுத்துரைத்து, துரியோதனனது சபையில் அவனுக்கிகழ்ச்சியே பெரும்பாலும் விளைந்ததென்றும், அவனிறந்த பின்னரே அவனது மாண்பு நன்கு நிச்சயிக்கப்பட்டதென்று முன்னோரிதழில்,'கர்ணன் மாண்பு' என்னும் கட்டுரையில் கூறியுள்ளேன். அந்தக் கருத்தினையே திருவாளர் முதலியாரவர்கள் ஓரேவாக்கியத்தில்சுருங்கக்கூறி விளங்கவைத்ததற்காக என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இனி, முதலியாரவர்கள், பாரத கதாநாயகர் யார் என்பதை ஆராயுமாற்றால், பீஷ்மன்முதலியோரையும் கதாநாயகராகக் கருத ஒண்ணாதென்று கூறி,

"பாரதப்போர் யாருக்காக நடந்ததோ அப் பெருந்தகையும் கதாநாயகனென்னலாகாது; தருமராசன் உரிமையை நிலைநிறுத்தப் பாரதப்போர் நடந்தும், வீமசேனனுக்கும் அருச்சுனனுக்கும் உள்ள ஒளியானது, தருமராசனை நாம் சரியாகக் காணமாட்டாதபடி மறைத்துவிடுகின்றது.........பார்த்தன்தான் இப்பாரதசரிதைக்கு நடுநாயகமாய்த் திகழ்கின்றான். ஆகையால் தேவாரம்பாடிய நமது சமய குரவர் பாரதக்கதையைக் குறிக்கு மிடங்களில் பார்த்தனுக்குச் சிவன் அருள்செய்த விஷயமே முக்கியமாய் விளங்குகின்றது."

என்று எழுதியுள்ளனர். அப்பர்பெருமான், அருச்சுனனுக்குப் பரமன் அருளியதைப் பலகாலும் போற்றியுரைப்பதால், அவ்வாறு போற்றப்பட்ட அருச்சுனன் பாரத கதா நாயகனென்னும் பெருமையுடையோன், என்று முதலியாரவர்கள் உபசாரமாகக் கூறியிருந்தால் ஒருவிதத் தடையுமில்லை. ஆனால் பாரதம் நர-நாராயண விசயம், அவர்களே கதாநாயகர், தருமனது உரிமையை நிலைநாட்டப் பாரதப் போர் நிகழ்ந்ததெனினும் வீமனுக்கும் விசயனுக்குமுள்ள ஒளி தருமராசனை மறைக்கின்றதென்று, முதலியா ரவர்கள் உண்மையில் கூறுவாராயின், அது எனக்கு வியப்புத்தரும் விஷயமேயாகும்.ஆதலின் அவர்உரையை ஆராயுமாற்றால், தருமனது மாண்பினைக் கற்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

பாரதத்தைப் பற்றிப் பல மேதாவிகளும் தமது ஆராய்ச்சியுரைகளில், பாரதம் அறத்திற்கும் மறத்திற்கும் நிகழ்ந்த போரெனவும், மிருக பலத்திற்கும் ஆன்ம சக்திக்கும் இடையே நிகழ்ந்த போரெனவும், மற்றும் பலவாறும்எழுதியுள்ளார்கள். எளிய நடையில் சொன்வோமென்னின், பாரதம் அறத்திற்கும் மறத்திற்கும்நேர்ந்த ஒர் யுத்தமே என்பதற்குத் தடையில்லை. இன்னும் சரித்திர ஆராய்ச்சிகள் செய்வோர், பாரதம், நாகரிகம் குறைந்த மிகப் பண்டைக் காலத்திய சரித்திர வரலாறுகளைப் பின்னாள் தொகுத்த இதிகாசமென்றும், முதலில் அது, அருச்சுனனது வீரப்பிரதாபங்களோ, அல்லது, பாஞ்சாலியினது வஞ்சினம் தீர்த்தலோ ஆகிய கதைகளை யடிப்படையாகக் கொண்டதென்றும், பின்னால், தத்துவ உணர்ச்சிகள் பெருகிய காலத்தில், தருமனது அறமாண்பு பெருக்கப்பட்டு, அம் மாபெரும்போர் அறத்திற்காக நிகழ்ந்த போரெனவும் ஆக்கபட்டதென்றும் கூறுவார். அத்தகைய ஆராய்ச்சிகளில் நாம் தலையிடவேண்டுவதில்லை. நமக்குக் கிடைத்திருப்பது முழுப்பாரதமாதலால், அதைப்பொறுத்தமட்டில், பாரதத்தின் சுருக்கம் யாதெனில், அது அறத்திற்கு மறத்திற்கும் நிகழ்ந்தஒரு போரென்பதில் யாதொரு தடையுமில்லை. அப்போர் நடந்த இடமும் தர்ம க்ஷேத்ரம் குருக்ஷேத்ரம் எனவும் மெய்விளங்கவருகுருநிலமெனவும் பெயர் பெறும்.

இன்னணம் பாரதக்கதையின்முக்கிய அம்சம் தருமனது அறமேயென்று நாம் எளிதிலறிந்துகொள்ளலாம். ஆயினும் பாஞ்சாலியின் சபதமும்,விசயனது வென்றி வீரங்களும் பொருளல்லவோ வென்னின், அவை முதற்பொருளல்லவென்றும் அம்முதற்பொருள் தருமனது அறமாண்பெனவும் விளக்கவேண்டும்.முக்கியமா யுதிட்டிரன் தருமசொரூபியே யென்றும்,அவனுடைய அத் தருமத்திற்கே பாரதப்போர் நிகழ்ந்ததெனவும் காட்டவேண்டுமன்றோ? ஆதலின் இப்போர் துவக்குவதற்குக் காரணமாயிருந்த விஷயங்களை, உத்தியோக பருவத்தை எடுத்துக்கொண்டு ஆராய்வோம். பாண்டவர் நாடுவேண்டி உலூகனைத் தூதனுப்பியபின், திருதராட்டிரன், அரசியலென்பது பெரும்பாரமாதலால் அவர்கள் மீண்டும் வெங்கானம் ஏகுவதே தகுதியென்று சஞ்சயனைத் தூது விட்டான். அம்மொழி கேட்டதும் தருமன் மிகவும் சஞ்சலத்தில் ஆழ்ந்து நின்றான். இளைஞர் புடைசூழ இருக்கையிலமர்ந்து, கண்ணனை நோக்கி,

அருஞ்சமரம் புரியும்வகை அவருரைத்தார்
ஆனாலும் அறமொன் றின்றிப்
பெருஞ்சமரம் விளைக்குமது கடனன்றென்
றருள்வெள்ளம் பெருகத்

தருமன், அறமொன்றும்இல்லாமல் சமர்விளைப்பது கடன் அன்று, என்று வேறெந்த விஷயங்களையும் கருதாது அறத்தினையே பொருளாக மதித்துக் கூறியதில் பாரதத்தின் சாராம்சமெல்லாம் அடங்கியிருக்கிறதன்றோ? இவ் வறவொளியின் உண்மையைக் கண்ணனாலும் தகர்க்க முடியவில்லை. ஆதலின் அவர் இளைஞரைத் தூண்டுமாற்றால்,

செய்வரா லினமுகளும் திருநாடு
பெறநினைவோ? சென்று மீளப்
பைவரா யருங்கானிற் பயின்றதிரி
தரநினைவோ? பகைத்த போரில்
உய்வரார் எனவிரைவி னுருத்தெழுந்து
பொரநினைவோ? உண்மை யாக
ஐவராம் அவனிபர்க்கு
நினைவேதென் று



கூறினர். எனினும் தருமராசனது ஆன்ம சஞ்சலம் அமைதியடைந்தாலன்றி ஒன்றும் அசையாதல்லவா? அவ் 'வருள்' வழியே அவன் நடந்தானெனின் இம் மா பெரும் போர் விளைவ தெங்ஙனம்? ஆயினும் அவ் வான்ம சஞ்சலத்தைத் தருமன் தனது மனச்சான்றினாலன்றிப் புறவந்தர்யாமியாய் நின்ற பகவானிடமும் கேட்டுத் தீர்ப்பதன்றி.மகாகாவியத்திற்கே உரித்தான,

கயிரவமும் தாமரையும் கமழ்பழனக்
குருநாட்டில் கலந்து வாழ
உயிரனையாய்! சந்துபட உரைத்தருளென்
றுனறத்தின் உருவம் போல்வான்

என்னும் செவ்வணியணிந்த சொல்லில், தனது திருவுள்ளத்தின் அழகை வெளிப்படுத்தி நின்று, அப் பகவானை 'உயிரனையாய்' என்றும் கூறுகிறான். அந்தர்யாமி என்றால் உண்ணின்று உணர்த்தும் பகவன். அப்பகவானைநிகர்த்துப் புறத்தே நிற்பவன்புறவந்தர்யாமியன்றோ? ஆதலின் தனது மனச்சான்றினையும், அவ்வுயிரனையானையும் கேட்டு முடிவு செய்ய நினைத்துப் புகன்றான். அதற்குக் கண்ணன்,

அரவுயர்த்தோ னுடன்மறுசூ தாடிநீர்
வென்ற †வந்நா ளவன்தான் சொன்ன
விரதமொழி தவிராமல் வெங்கானம்
போய்மீண்டீர் வெய்யோன் உங்கள்
குருநிலத்தில் பாதியினிக் கொடாதிருந்தால்
ஆங்கவனைக் கொன்று போரில்
இருநிலத்தை யாளவினித் துணிவதே
கடனென்றான் எம்பி ரானே.

என்றபடி உள்ளிருக்கும் அந்தர்யாமியைப் போலன்றித் தடுமாற்றமில்லாமல் உரைத்தார் கண்ணன். எனினும்தருமனது ஆன்ம சஞ்சலம் அத்துணையெளிதில் விடவில்லை. அவன் பின்னும்,

குரவரையும் கிளைஞரையும் குலத்துரிய
துணைவரையும் கொன்று போர்வென்
றரவநெடும் கடலாடை அவனியெலாம்
தனியாளும் அரசு தன்னின்
கரவுறையு மனத்தாதை முனிக்குரைத்த
மொழிப்படியே கானம் தோறும்
இரவுபகல் பலமூல சாகநுகர்ந்
துயிர்வாழ்தல் இனிது நன்றே.

என்று உரைத்தபோதுதான் கண்ணனது மிகச்சிறந்த போர் நடந்தது. பாரதப்போரில் வீடுமன்மீது ஆழியெடுக்க நேர்ந்தபோதும், சற்று நேரத்திற்கெல்லாம் அந்தி படுவதாயிருக்கவும் சயிந்தவனைத் தோற்றம் காணாத நிலையினும், மற்றும் பலவிடத்தும் தோன்றாத கஷ்டம் கண்ணனுக்குஉண்டானது இங்கேயாகும். அத் தருமன் மனம் உடன்பட்டாலன்றி வேறொன்றும் பயன்படாது. வஞ்சினமுரைத்த இளைஞரும், குழல்விரித்த பாஞ்சாலியும் ஒன்றும்கழற இயலவில்லை. கழறியும் பயன்படா தென்பதை யறிந்தே, கண்ணன் மெல்ல மெல்ல,

மோதமருக் கிளைத்துநீர் மொய்த்தபெரும்
கானகத்தே முடுகிச் சென்றால்
என்று மிக்க பரிவுகூர்குரலில் புகன்று
பூதலத்தோர் ஏசாரோ? புகன்றபெரு
வஞ்சினமும் பொய்த்தி டாதோ
நீதியோ எனவுரைத்தான்......

'பூதலத்தோர் ஏசாரோ' என்று வீமவிசயரது வீரமெல்லாம் வடிப்படுமே என்று கூறினர். அது பயன்படாதுபோகவே, 'புகன்றபெருவஞ்சினமும் பொய்த்திடாதோ?' என்று பாஞ்சாலியின் விரித்த குழலைப் பற்றிக்கூறியும் பயனிலாததுகண்டு, 'நீதியோ' என்று அறத்தின் மாண்பினைக் காட்டித் தருமனது இதய நரம்புகளில் சரியானதொன்றைத் தடவிவிட்டார். உடனே தருமனது நெஞ்சமும் தக்க சுருதியுடன் இசைத்தது.

நீ தூது நடந்தருளி எமதுநினை
வவர்க்குரைத்தால் நினைவின் வண்ணம்
தாதூதி யளிமுரலும் தண்பதியும்
தாயமும்தான் தாரா னாகில்
மீதூது வளைக்குலமும் வலம்புரியும்
மிகமுழங்க வெய்ய காலன்
மாதூதர் மனங்களிக்கப் பொருதெனினும்
பெறுவனிது வசையும் அன்றே.

முந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரில்
நடந்துழவர் முன்றில் தோறும்
நந்தூரும் புனல்நாட்டின் திறம்வேண்டு
நாடொன்று நல்கா னாகில்
ஐந்தூர்வேண் டவையிலெனில் ஐந்திலம்வேண்
டவைமறுத்தால் அடுபோர் வேண்டு
சிந்தூரத் திலகநுதற் சிந்தூரத்தின்
மருப்பொசித்த செங்கண் மாலே.

என்று நெடிதுநினைத்தும், புறவந்தர்யாமியின் துணைகொண்டும் முடிவுகட்டிய பெருமை இது தன்னையே நிகர்த்ததாகும்.

அம்முடியில் பழிதீர் வஞ்சினமில்லை, வெஞ்சினமில்லை, நாடு வேண்டுமென்னும் இச்சையில்லை; போரில் உய்வாரென்னும் வீரமொன்றில்லை,மற்று,சத்தியத்தைஅறக்கொள்கையை எவ்வணமேனும் காக்கவேண்டுமென்னும் பேரவாவே குன்றிலிட்ட விளக்கைப் போல் தீவிர ஒளிவீசும்.

உடனே வீமன், வெஞ்சினமுள நாவில் உரை பதறக் கதுமென வெழுந்து, சரமாரியாகத் தருமனைப் பழித்தான். கண்ணனைப் பார்த்து, 'ஞாலமெலாம் பூத்தோனே...ஊன மிலான் மானமிலா துரைப்பதற்கென் செய்வது" என்றும்,

விரிகுழல்பைந் தொடிநாணி வேத்தவையில்
முறையிடுநாள் வெகுளே லென்று
மரபினுக்கும் நமக்குமுல குள்ளளவும்
தீராத வசையே கண்டாய்! என்றும்,
போர்முடித்தா னமர்பொருது புலம்புறசொற்
பாஞ்சாலி பூந்தண் கூந்தற்
கார்முடித்தா னிளையோர்முன் கழறியவெஞ்
சினமுடித்தான் கடவுட் கங்கை
நீர்முடித்தா னிரவொழித்த நீயறிய
வசையின்றி நிலைநின் றோங்கும்
போர்முடித்தா னிப்படியே யார்முடித்தார்
இவனுடனே பிறப்ப தேநான்

என்றும் பலவாறாகக் கூறினான். பிறகு விசயனும் சில

† வடமொழி பாரதத்தில், திருதராட்டிரன் அவர்களை இரண்டாவதுமுறை சூதாடச் சொன்னானென்றும்,அதில் தோல்வியுற்றதினால் அவர்கள் வெங்கானம் ஏகநேர்ந்ததென்றும் சொல்லி யிருக்கின்றது. ஆனால் வில்லிபாரதத்தில் சும்மாவே அவர்கள் வனவாசம் செய்ய ஏற்பாடாயிற்றென்றும், பிறகு திரௌபதியின் தூண்டுதல்மேல் தங்களது அடிமைத்தனத்தினின்றும் விடுவித்துக்கொள்ளமறு சூதாடி வென்றார்களென்றும் கூறப்பட்டிருக்கிறது.

மொழிந்தனன். ஆனால் தருமனது ஆன்மா நிம்மதியாயிருக்கையில் அம்மலையினும் மாணப்பெரிய தோற்றத்தானை யாதே கலக்கக்கூடும். அவர்களது மொழிகளும் மடவரலின் புலம்பலும் சேர்ந்து அம்மகானினது முடியைக் கலைக்க இயலவில்லையெனின், பாரதத்தின் முற்பொருள் தருமராசனது அறமாண்பா அல்லது பாஞ்சாலியின் சபதமா அல்லது அருச்சுனனது வீரமா என்பதை ஒரு தலையாகத் துணியலாம். ஆதலின் அவ் வறநாயகனே பாரத கதாநாயகனெனக் கூறல் எவ்வாறு பிழையாகும்?

பின்னும், முதலியாரவர்கள் பாரதம் நரநாராயண விசயமென்றும் அவர்களே கதாநாயகர் என்னவும் பொருள்படும்படி எழுதுகிறார்.

முன்னு மாமறை முனிவரும் தேவரும் பிறரும்
பன்னு மாமொழிப் பாரதப் பெருமையும் பாரேன்
மன்னு மாதவன் சரிதமும் இடையிடை வந்த [ன்
தென்னு மாசையால் யானுமீ தியம்புதற் கிசைந்தே

என்னும் சிறப்புப்பாயிரச் செய்யுள் கண்ணனையே பாரத கதாநாயகனுக்க ஆதாரமாகலாம். மேலும் கண்ணன் கீதோபதேசம் செய்தபோது,

மன்னிய பொருளும் யானே
மறைக்கெலாம் முடிவும் யானே
உன்னை யான் பிரிவதில்லை
ஒருமுறை பிரிந்த போதும்
நன்னிலா எரிக்கும் பூணாய்
நரனுநா ரணனு மானோம்
முன்னொரு பிறப்பில் யாமே
இராமலக் குவப்பேர் பெற்றோம்
இந்நெடும் பிறப்பில் நீயும்
யானுமாய் ஈண்டு நின்றோம்.

என்று தங்களது அதிமானுஷிக வரலாற்றைக் கூறி நின்று, பாரதஉலகை ஆட்டும் தெய்வங்களாய் விளங்குகின்றனர். அவ்வனமே இவர்கள் எங்கும் தோல்வியென்பதை யறியாராய்ப் போர்த்திளைத்தனர். இதனால் பாரதம் நரநாராயண விசயமென்றும் அவர்களே இக்கதையின் நாயகர்களென்றும் அறிஞர் கூறுவதற்கு ஆதாரமிருப்பதுபோல் தோன்றுகிறது. ஆனால் வேறொரு கருத்தும்தான் தோன்றுகிறது. முற்கூறியதெல்லாம் அவர்கள் மனித உலகத்திற்குப் புறம்பாய் நின்று அதனை ஆட்டி வைக்கும் தேவர்களாய்த் தோன்றுகின்றனரேயன்றி, விதியினால் கஷ்டங்களில் உழன்று கஷ்டங்களைவென்று தங்கள் கொள்கையை நிலைநாட்டிய மானிட கதாநாயகர்க ளல்லர். உதாரணமாக, கண்ணன் வாழ்க்கையில் இரக்கத்தை யழைக்கின்ற துயரம் ஏதேனும் உண்டோ? விதிக்குப் புறம்பான பிரான் அவனென்பதற்குப் பாரதத்தில் தனது அதிமானுட ஒளியைப் பலதரமும் காட்டுவதே ஏற்ற சான்றாகும். ஆதலின் உலகிலிருந்தும் உலகியலற்றவனாய் அதை நடத்தும் கடவுள் பிரபஞ்ச கதாநாயகனாதலின், சிறப்பாகப் பாரத கதாநாயகனா யமைவது எங்ஙனம்? பின், வில்லிபுத்தூரர் அப்படிக் கூறினாரே யெனின், அவர் கூறியதெல்லாம், 'பகவானது சரிதை இதில் கலந்துள்ளதாதலின் இதனைநான் பாடினேன்' என்பதே. அதனையே, வேறுமுறையாகக் கூறுவோமெனின் 'பகவானது சர்வ வியாபகத்துவத்தை நான் இதில் நன்கு விளங்கக் காண்கிறேன்' என்றமையும். ஆதலின் கண்ணன் நாம் வழங்கும் முறையில் கதாநாயகனெனக் கூறல் இயலாது. அவ்வண்ணமே அவனொடு ஒன்றாம் விசயனும். விசயனுடைய கொள்கை ஏதேனுமொன்றாக்கும் பாரதப்போர் விளைந்ததன்று. அம்மாபெரும் போர் தருமனது வாய்மையை நிலைநிறுத்தவேண்டியே நிகழ்ந்ததாதலின், அத்தருமன் என்னும் கதாநாயகனுக்குத் துணையாயமைந்த புருஷர்களேயன்றி இந்நரநாரணர் இதர நாயகர்கள் அல்லர்.

பின்னும், முதலியாரவர்கள் வீமனுக்கும் விசயனுக்குமுள்ள ஒளி தருமராசனை நாம் சரிவரக்காணமாட்டாமல் மறைக்கின்றது என்று கூறுகிறார். அப்படித் தருமனது அறவொளியை மங்கச் செய்கின்ற ஒளி விசயனிடத் தென்ன விருக்கிறதென்பதுதான் தெரியவில்லை. நாராயணனோடு ஒன்றிய அவதார விசேஷத்தைத் தவிர விசயனிடம் வேறென்ன ஒளி யிருக்கிறதோ அறியேன். அப்படியாயின் வீமனிடம் தோன்றும் அவ்வொளி தான் எத்தகைத்து? சாதாரணமாகக் கதாநாயகனுக்குரிய வீரமும் காதலும் தருமனிடத்துக் காணாது வீம விசயரிடத்துக் காண்படுவதே அவர்களது 'ஒளி'போலும். அவ்வொளி பொறையை மணந்து அறமேவிய தருமராசனது ஒளியை நாம் சரிவரக் காணமாட்டாமற் செய்யும் போலும்! அது வியப்பே. எனினும் சிலர் பொதுவாகக் கதாநாயகனெனின் 'வீரம்புரிந்து மடவரலை வேட்பவன்என்று நியாயம்கூறி வரலாம். சாதாரணக்காப்பியங்களுக்கு மேற்கூறிய விதி ஏற்குமெனினும், மாஞாலத்தினில் ஆழ்ந்து அதனைமுற்று மனுபவித்துணர்ந்த மகாகவிகள் இயற்றிய காப்பியங்களுக்கு அவ்விதி ஏற்காது. ஷேக்ஸ்பியர் கவியின் மிகச்சிறந்த 'ஹாம்லட்' 'மக்பத்' முதலியநாடகங்களை, மேற்கண்டபுல்லியவிதியொன்றைக்கொண்டு மதிப்பது எங்ஙனம்? ஆதலின் இப்பெருங்காவியத்திற்குத் தலைவன் காதல் வீரம் முதலியனசேராத துய்யநிர்மலமான, அறக்கடவுளாய் அமைந்தும், வீரமும்மற்றெல்லாமும் அவனது அறத்திற்குக் கட்டுப்பட்டு விளங்கியதும் இவ்விதிகாஸத்தின் பெருமையாகும். ஆதலின் வீமவிசயரது 'ஒளி' தருமனைக் காணவொட்டாது செய்கின்றதென்பது 'ஹாம்லட்' நாடகத்தில் 'பார்டின்பிராஸ்' என்னும் வீரனுடைய 'ஒளி' ஹாம்லட்டைச் சரியாகக் காணவொட்டாதபடி செய்கிறதென்பதை ஒக்கும்போலும்.

(தொடரும்)

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
சியவனப்ராசா மஹாபிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ச்யாவனப்ராச
காஸ்ட்ராலகஸ்
ஜவரேக்
[பண்டிதர்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]



# அண்டங்கள்

பாராதி யண்டங்கள் அத்தனையும் வைக்கின்ற
பரவெளியி னுண்மை காட்டிப்
பற்றுமன வெளிகாட்டி மனவெளியி னில்தோய்ந்த
பாவியேன் பரிசு காட்டித்
தாராள மாய்நிற்க நிச்சிந்தை காட்டிச்
சதாகால நிஷ்டை யெனவே
சகசநிலை காட்டினை! சுகாதீத நிலயந்
தனைக்காட்ட நாள் செல்லுமோ?
காரார எண்ணரும் அனந்தகோ டிகள்நின்று
காலூன்றி மழை பொழிதல்போல்
கால்வீசி மின்னிப் படர்ந்துபர வெளியெலாங்
கம்மியா னந்த வெள்ளஞ்
சோராது பொழியவே, கருணையின் முழங்கியே
தொண்டரைக் கூவு முகிலே!
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே!

—தாயுமானவர்.

தாயுமான சுவாமிகள் பரம்பொருளைச் சுகவாரியாக உருவகப்படுத்தும் பதிகத்தில் ஒரு செய்யுள், அண்டங்களின் இலக்கணத்தையும் நிலையையும் அதனினுள்ள நமது சம்பந்தத்தையும் விளக்கும். அவனருளாலே அவன் தாள் வணங்கி என்றதுபோல், திருவருள்பெற்ற இப்பெரியார் பாராதி அண்டங்கள் அத்தனையும் வைக்கின்ற பரவெளியின் உண்மைகாட்டப்பட்டார்; பிறகு அவற்றைப் பற்றியோடும் மனவெளியின் தன்மை கண்டார்; மனவெளியில் தான் லயமாகும் நிலையும்கண்டார்; நிச்சிந்தையான பெருநிலை கண்டார்; பிறகு சதாநிஷ்டையாய் நிற்க; சகஸ சமாதி கைவல்யமானார்; என்பது இந்தச்செய்யுளின் குறிப்பாம். இவை முறையே யாவை என்று ஆராயப்புகின் அண்டங்களின் தன்மையும் அவற்றின் சொரூப லட்சணமும் (Static aspect), தடஸ்த லட்சணமும் (Dynamic aspect), ஏனைய உபலட்சணங்களும் உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இவற்றை நாம் முறையே எடுத்து ஆராய்வோம்.

அண்டங்களில் முதல் அண்டமாக எடுத்துக்காட்டக்கூடியது நாம் வசிக்கும் இந்நில உலகமே. இதனையே முதலாக எடுத்து முற்காலத்தில் ககோளசாஸ்திரிகள், (astronomers) மற்றக் கோளங்களின் தன்மைகளையும் அவற்றின் பலனையும் நமக்கு விளக்கிக் காட்டினார். சூரியனைச்சுற்றிப் பூமி ஓடலாம்; ஆயினும் நமது ஊனக்கண் அனுபவத்திற்குச் சூரியனும், புதன், வெள்ளி, அங்காரகன், வியாழன், சனி முதலிய கிரகங்களும் நம்மைச் சுற்றி வருவனபோல் தோன்றக்கண்டு களிக்கின்றோம். நமது அனுபவத்திற்கு, நாம் இருக்குமிடத்திலேயே அசைவற்றிருப்பதுபோல் தோற்றுகின்றது. மற்றக் கிரகங்கள் நம்மைச் சுற்றி ஓடுங்காலையில் நமக்கு நன்மைதீமைகளை விளைவிப்பதும், பிரத்தியட்ச அனுபவமாய்க் காணப்படுகின்றது. பூமியைச் சுற்றியோடும் சந்திரன் இடம் மாறும் கால அவஸ்தையால் சமுத்திர ஜலம் சுரந்து பெருகி வருவதையும் —(Rise of tides), பித்தம் பிடித்தவர்களது உன்மத்தம் அதிகரிப்பதையும் நாம் காண்பது போலவே, சூரியன் கிருத்திகைநட்சத்திரத்தில் விளங்குங்காலத்தில் கொடிய தீட்சண்ணியம் தருவதும் (Dog days); திருவாதிரைக்கு ஞாயிறு வருங்காலத்தில் கோடைமழை மேல்நாட்டில் தப்பாது பெய்து மிளகு முதலியவற்றை விளைவிப்பதும் ஒரு தன்மையாகவே, காணப்படும். நமது உலகம் இருப்பதனால் அன்றோ ஏனைய அண்டங்களைப்பற்றி நாம் ஆராய்கின்றோம். நமது நில உலகம் நாசமடையுங்கால் எத்துணை அண்டங்கள் இருந்தென்ன, அழிந்தென்ன, யாவும் ஒன்றே. ஆதலால் நமதுபெரியோர்கள் எது எதைச் சுற்றுகின்றது என்னும் ஆராய்ச்சியில்புகாமலே நாம் இருப்பதையே மத்திய அண்டமாகக் கொண்டு அவ்வடிப்படையாலேயே எக்காரியங்களையும் முடிக்கலானார். இயற்கைத்தத்துவ இலக்கணத்தில் புகுங்காலையினும், பூவுலகமே மத்தியமாய் நிற்கின்றது. ஆத்ம விசாரணைக்கும் அதுவே மத்திய நிலையாய், நாமே மத்திய புள்ளியாவோம். ஆதலால் தாயுமானவரும் இப் பாரை ஆதியாகக்கொண்டு ஏனைய அண்டங்களைப் பின்வைத்து:—

"பாராதி அண்டங்கள் அத்தனையும் வைக்கின்ற
பரவெளியி னுண்மை காட்டி"— என்றார்.

அண்டமாவது உருண்டை வடிவம் பெற்றது. உருண்டைவடிவம்பெற்றிருப்பினும், அண்டத்திற்குப் பொருளாய் அமைந்த முட்டையின் தன்மையே அதன் இயற்கையாகக் காணப்படுகிறது. அதாவது சுத்தமான உருண்டைவடிவாயிராமல் (Pure sphere) சற்று ஒரு பக்கம் அதிகமாய்க் குவிந்தும், மற்றொரு பக்கம் சற்று நீண்டும் நிற்கின்ற முட்டைத்தன்மை (oval shape) பெற்றிருக்கும் இதற்குக் காரணம் ஆராயப்புகின் வட்டமான ஒரு பொருள் வேகமாக வெளியில் செல்லுமாயின் இவ்விதமாய் உருவம் மாறுவது சகஜமே (our Earth is bulged at the Equator and flatened at the poles on account of its revolution on its own axis.—Hence we find the variation of gravity on the different parts of the Earth) ஆதலால் ஒவ்வொருகிரகத்தின் பாதையும் வட்டவடிவமாயிராமல் முட்டைவடிவம்போல் (Eliptic orbit) விளங்குகின்றது. நமது பூமிமாத்திரமல்ல, அதற்கு அப்பாலே வெகுதூரத்திலுள்ள சனிக்கிரகமும் மற்றைய கிரகங்களும், (Saturn, Uranus, Neptune—we have also beyond Neptune the newly discovered planet Pluto) இத்தன்மைபெறுவது சாதாரணமான தூரதிருஷ்டிக் கண்ணாடியாலே அறியக்கூடியதாயிருக்கிறது.

(தொடரும்)

m 211, N 26 KN
N34-7.47
199197

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

**பறக்கும்மனிதர்:**—அமெரிக்காவிலுள்ள ஒருமனிதர் வேகமாகப் போகும்பொருட்டுச்செயற்கைஇறக்கைகளைக்கட்டிக்கொண்டுபறக்கமுயற்சிக்கிறார். இவர் ஒரு மேடானஇடத்தில் நின்றுகொண்டுசெயற்கைச் சிறகுகள் கட்டிக்கொண்டு சில பர்லாங்தூரம் மேலே பறந்தாராம். இனிமைல் கணக்கில் பறக்க முயற்சிக்கிறாராம்.

* * *

**தீர்க்காயுள்:**—டாக்டர் பேக்கர் என்ற அமெரிக்கர் கடலில் கிடக்கும் ஒருவிதப் பூண்டுகளைத் தின்று மக்கள் இருநூறாண்டு வாழலாமென்று கூறுகிறார். அவர் இப்பொழுது இந்தியர்களின் யோக முறைகளை ஆராய்ச்சி செய்வதற்காக நமது நாட்டிற்கு வந்திருக்கின்றார். மக்கள் உடம்பில் அடங்கிய தொண்ணூற்றிரண்டு பொருள்களும் கடல்நீரினில் இருப்பதாகவும், அவை மேற்படி கடற்பூண்டில் அடங்கியிருப்பதால் அதனை உட்கொள்ள வேண்டுமென்றும் அவர் சொல்லுகிறார். 70 வயது சென்ற இந்த வைத்தியர் சென்ற பதினைந்து ஆண்டுகளாக இந்த முறையைத் தாமே கைக்கொண்டு வருவதில் அவர் மிகுந்த இளமையுடன் விளங்குகிறாராம்.

* * *

**உண்மை யந்திரம்:**—பதினாறு ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவிலுள்ள லானிங் என்ற ஊர் வாசியான ஜோசப் ப்ளாசென் சீட்டிஸ் என்ற பதினாறு வயது வாலிபர் ஒருவர் ஒரு பாங்கியைக் கொள்ளையடித்துக் கொலை செய்ததாக வழக்கு ஏற்பட்டது. அவர் நீதிஸ்தலத்திலும் மிச்சிகன் சிறைக்கோட்டத்திலும் தாம் நிரபராதியென்று கூறிவந்தார். ஆயினும் அவரைத் தண்டித்துவிட்டார்கள். சமீபத்தில் உண்மை சொல்லுவிக்கும் யந்திரத்தின் உதவியால் அவரைச் சோதனை செய்யுமாறு ஒரு நிபுணரை ஏற்பாடு செய்தார்கள். அந்தநிபுணர் அந்த வாலிபர் நிரபராதியே யென்று கூறியதால் அவரை உடனே அதிகாரிகள் விடுதலை செய்துவிட்டார்களாம்.

* * *

**ஞானமுள்ள நாய்:**—இங்கிலாந்தில் டெர்பிஷயரில் பேக்பெக் என்னும் நகருக்கருகே பிரிட்ஜ் இன் என்னுமிடத்தில் ரால்ப் ஹெத்கோட் என்பவர் ஒருநாய் வளர்த்து வருகிறார். அதற்கு எட்டு வயதிருக்கும். அது மிகுந்த அறிவுள்ள நாயாய் விளங்குகிறது. சமீபத்தில் அவர் அந்த நாய்க்கு லைசென்ஸ் எடுக்குமாறு அதனையே கச்சேரிக்கு அனுப்பிவைத்தார். நாயிடம் பத்து ஷிலிங் நோட்டைக்கொடுத்தார். நாய் அதனை வாங்கிக்கொண்டு கச்சேரிக்குச் சென்று லைசென்ஸ் வாங்கிக்கொண்டு மீதியான அரை கிரௌனையும் பெற்றுக்கொண்டு வீடு திரும்பியது. எஜமான் என்ன வேலையிட்டாலும் அதுபுத்திசாலித்தனத்துடன் செய்கிறது. தெருக்களில் கோழிகள் சண்டையிட்டால் இந்நாய் அவை சண்டையிடாமல் தடுத்துக் குற்றமுள்ள கோழி எது வென்பதை அறிந்து அதனைத் துரத்திவிடுகிறது. எஜமான் எந்த நிறமுள்ள ஆடை, சப்பாத்து முதலியவற்றைக் கேட்கிறாரோ அவற்றை எடுத்துக்கொண்டு போய்க் கொடுக்கிறது. மேலும் அது சிறிய நாய்க் குட்டிகளை அழைத்துக்கொண்டு உலாவச்செல்கிறது. குட்டிகளுக்கு வழியில் ஆபத்து ஏற்படாமல் ஜாக்கிரதையாக அழைத்துக்கொண்டு போகிறது. வழியில் எந்த நாய்க் குட்டியாவது குறும்பு செய்தால் அதனைப் பயமுறுத்துகிறது.

**NATIONAL INSURANCE COMPANY, LIMITED.**
**Head Office:**
**NATIONAL INSURANCE BUILDING,**
**362, China Bazar Rd, Esplanade, Madras.**

**1933 Results.**

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

**Specialities.**

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

**Consult**
**NATIONAL FIRE**
**AND**
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
Head Office:—
**NATIONAL INSURANCE BUILDING,**
**362, China Bazar Rd, Esplanade, Madras.**
for Fire, Motor & Accident policies.

**A sound Company.**

Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

**யுனைடெட் இந்தியா**
**லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.**
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ல் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷ்யூரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்டமுடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

**சிறந்த பலவிருத்தி ஔஷதம்**
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
**32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1**
**இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!**
**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
**26 பிராட்வே, மதராஸ்.**

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)